THAGAM
# தாகம்
ஏப்ரல் 1994 £1.00
Thagam PO Box 3186 London E17 6TJ

**Rengan N. Devarajan**
**Solicitor**
FLAT 4
BEAL ROAD FRONTAGE
24 MANSFIELD ROAD
ILFORD ESSEX 1G1 3AZ
TELEPHONE:
081-553 2917
FACSIMILE:
081-553 2632

# தலைக்கு மாதம் ரூபா 5000

– கலம்பகன்

அரச சார்பு கொழும்புக் குழுக்களின் பாரிதாப நிலை சொல்லி மாளாது. இந்தக் குழுக்கள் தம்வசம் உள்ள ஆள் ஒன்றுக்கு மாதம் 5000 ரூபா அரசிடம் கூலியாக பெறுகின்றன. இதில் 2000 அந்தத் தலைக்குரிய வருக்கு, 3000 அவரவர்களின் தலைவருக்கு.

இந்த அசிங்கமான அரசியல் வியாபாரத்தில் முக்கியமாக ரெலோ, புளொட், ஈபிடிபி முன்னணியில் இருக்கின்றன.

எமது மக்களின் வாழ்வு தன் கரைகள் அனைத்தையும் இழந்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சோக நிலைமையை ஒரு லாபகரமான தொழிலாக்கியுள்ளனர் இவர்கள்.

'தானமாய் தந்ததிற்கு பல்லைப் பிடித்துப் பார்பானேன்' என்பதே இவர்களின் அரசியலும் ஆனபின் நடுக்கடலிலும் நக்குத் தண்ணிதான்.

ஆட்கடத்தலால் லட்சங்களாக, குறிப்பாக கொழும்பில், பணம் பறிக்கும் இக் குழுக்களுக்கு இலங்கை இராணுவம் தாராளமாகவே அனுசரணை வழங்கி வருகிறது என்பதும் அறிந்த ஒன்றே.

இலங்கை அரசின் இராணுவ இலக்குகளை விட அரசியல் இலக்குகளுக்கு இக்குழுக்கள் அறிந்தோ, அறியாமலோ ஒரு வகையில் அரசினால் மிகச்சாதகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிலைமை எவ்வாறு மாற்றத்துக்கு உள்ளாகும்?

இங்கு, கொழும்புக் குழுக்களின் வரலாறு உண்மையில் எப்பொழுது எப்படி தொடங்கியது என்பதை ஒளிவு மறைவு இன்றி பேசுவதே ஆரோக்கியமானது.

எனின், கொழும்பில் 'தேன்நிலவு' அரசியலை அடியொற்றி வந்தவையே இக் குழுக்கள்.

புலிகளின் அரசியல் அற நெறிகள் உருவாக்கிவிட்ட பக்க விளைவுகளே இவைகள்.

ஏன்?

இன்னும் வரும். □

பாரிஸ்
# ஈழநாடும் BNPத.காரியாலயமும்

– தருமி

சில மாதங்களுக்கு முன் பாரிஸ் ஈழநாடு காரியாலயம் எரிக்கப்பட்ட போது கூடவே கருத்து சுதந்திரத்திற்கு மீண்டும் ஒரு முறை தீயினால் சூடு போடப்பட்டது. மனித நாகரிகம் அருவருக்கும் இத்தகைய செயல்கள் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு அதிசயம் இல்லைத்தான்.

அதற்காக இத்தகைய அசிங்கங்களை தொடர்ந்து அனுபவிக்க முடியாது என்பதில் அனுமதிக்கக் கூடாது என்பதில் பொறுப்பு வாய்ந்த கூட்டு வேலைகளில் அனைத்து சிறிய பெரிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இணைந்தாக வேண்டும்.

அண்மையில் நிற, இனவாத கட்சியான BNP தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்ட கடித வெடி குண்டும் அரசியல் முரண்பாடுகளுக்கு வன்முறை வடிவம் கொடுக்கும் ஆபத்தான ஒரு நடவடிக்கையே.

இது ஒரு விஷப்பரீட்சையின் ஆரம்பமும் கூட.

ஈழநாடு மீதோ BNP மீதோ மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் கண்டனத்துக்குரியன.

திட்டமிட்ட வன்முறையின் அனைத்து வடிவங்களையும் இனி வரும் காலம் நிராகரிக்கும்.

வன்முறை அரசியலும் அரசியல் வன்முறையும் வெவ்வேறானவையல்ல. □

# வெல்லுதல்

– சுகன்

மழுவை ஏந்திய கடவுள்
மகசின் நிறைந்த துவக்கை
ஏந்தினார்.
புவி, ஒளி, விண், நீர் ஆகிய
பூதங்களைப் படைத்த கடவுள்
மின்கம்பத்தையும் துணுக்காயையும்
துரோகியையும் படைத்தார்.

ஒளி நிறைந்த மேனியும்
இமையாத கண்களையுமுடைய
தேவர்களுக்கு தலைவரானவர்
கடவுள்.

கமரிவ்ளக்கும் (Camouflage)
கழுத்தெல்லாம் குண்டும் குப்பியுமாய்
தேவர்கள்.

வாடாத மாலைகளை தேவர்கள்
அணிந்தனர்
மாவீரர் சமாதியை மட்டும் சிலர்
பெற்றனர்

பலம் மிகு உணவை தேவர்கள்
பெற்றனர்
பக்தர்கள் பலநாள் பட்டினி ஏற்றனர்
பங்கரை விட்டு பாரிசுக்கும் வந்தனர்

பிசாரியா, பேப்பர் பியூரோ
பெரும் பமித்தங்காய் தோட்டமென
போய் முறிந்து வீடுவந்தால்
போதாமோவென்று
அஞ்சுமணிக்கெழும்பி
அரைகுறையா முகம் கழுவி
அஸ்பிரேட்டரை இழுக்க
அடிவயித்துக்கை நோகுதென்று
ஆருக்குச் சொல்லி அழுவென்றனர்

தாகம்
ஒரு காத்திரமான வாசிப்பு

*ஆக்கங்களில் வரும் அனைத்துக்கருத்துகளும் படைப்பாளிகளதே. பிரசுரத்துக்கு உகந்த படைப்புகள் கொண்டிருக்கும் கருத்துகள் எதுவாயினும் தாகம் இடம் தரும். உங்களது எல்லா ஆக்கங்களிலும் விமர்சனக்கடிதங்களிலும் உங்கள் பெயர், முகவரி குறிப்பிடப்படல் வேண்டும்.*

இதழ் 4 ஏப்ரல் 1994

THAGAM
PO BOX 3186
LONDON
E17 6TJ

இனி வரும் இதழ்களில்...

அரசியலும் கலாச்சாரமும்
இலங்கை சினிமா
**புத்தக அறிமுகம்**

அல்தூஸர்
வாழ்க்கை வரலாறு
**புத்தக விமர்சனம்**

"எனக்குப் பிடித்த நாடகாசிரியன் பெர்டோல்ட் பிரெக்ட்"
பாலேந்திராவுடன்
**நேர்முகம்**

# கொம்பு இளைக்காது

அண்மைக்காலங்களில் டி. பி. விஜயதுங்கவின் குரல் உரத்து எழுவது பேரினவாதத்தின் இன்னுமொரு பெருமூச்சே அன்றி வேறென்ன?

யுத்தச்சுமையை நாடு தொடர்ந்தும் தாங்க முடியாத ஒரு சூழ்நிலையில் இது போன்ற போதையூட்டும் பேச்சுக்கள் எவ்வளவு காலத்திற்குத்தான் நீடிக்கும்.

ஒரு சராசரி மனிதனின் தர்க்க நியாயத்துக்கு இன்னும் அகப்பட்டுக் கொள்ளவில்லைத்தானே இந்த பம்மாத்து அரசியல்.

யுத்தத்திற்காக உலகெங்கும் ஓடியோடிக் கடன் கேட்கும் அரசின் நிலை பற்றி எதிர்க்கட்சிகள் அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பின.

அதற்கு டி. பி. தனது பதிலில், "வெளிநாடுகளில் நாம் கடன்படுவது பற்றி எதிர்க்கட்சிகள் கூக்குரலிடுகின்றன. நாம் வாங்குவது நீண்ட காலக்கடன். ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் கடன் வாங்கியவனும் செத்துப் போவான். கடன் கொடுத்தவனும் செத்துப் போவான்." என்றார்.

இது எப்படி?

எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்கட்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலும் கூட.

இதனால் இளைத்துப் போனது கட்சி மட்டுமல்ல அதன் தலைமையும் தான்.

ஆனால் பேரினவாதமோ இன்னும், இன்னும், ......

ஆக, மாடு இளைச்சாலும் கொம்பு இளைக்காத கதைதான்.

17 ஆண்டுகளாக பாராளுமன்றத்தை குத்தகைக்கு எடுத்த ஐ. தே. கட்சி மூன்று ஜனாதிபதிகளை நாட்டுக்கு தந்தும் என்ன பயன்?

# மணலாற்றிலிருந்து வெலிஓயா வரை

**வறியவர்களுக்கு உதவியா**
**அல்லது**
**இராணுவத்தினரின் C பிரிவுக்கு ஆட்சேர்ப்பா.**

அம்பாறை – மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பிரதேசத்திலிருக்கும் அறந்தலாவ, புளுகுணாவை வான்படை முகாம்களுக்கு இடைப்பட்ட நெடும் பிரதேசங்களில் புதிது புதிதாக குடிசைகள் முளைப்பதை அவ்வீதியில் பயணம் செய்வோர் அவதானிக்கமுடியும். கொக்கட்டிச்சோலைக்கு தென்மேற்காக 5 மைல் தொலைவில் அமைந்திருக்கிறது புளுகண்ணாவை. தொடர்ந்து வரும் குடியேற்றங்கள் மேலும் 3 மைல்களுக்கு அதே திசையில் தொடர்கின்றன. இப்பகுதியில் பொதுமக்கள் தாக்கப்படுவதும் இராணுவம் திடீர்த்தாக்குதலுக்குள்ளாவதும் தொடர்ந்து நடக்கிறது. 86ம் ஆண்டில் 30ற்கு மேற்பட்ட புத்தபிக்குகள் படுகொலை செய்யப் பட்டதும் இதே இடத்தில் தான். வீதியோரங்களிலுள்ள காடுகள் அழிக் கப்பட்டிருப்பினும் வெலிஓயா நிகழ் வுகளின் பின் புலிகள் விரும்பின் எப்போதும் தாக்கக்கூடிய நிலையே நிலவுகிறது.

**சிங்கள குடியேற்ற வாசிகள் சிலரிடம் நீங்கள் ஏன் தமிழர்களை கொடுமைப் படுத்துகிறீர்கள்** எனக் கேட்டோம்.

**அதற்கு அவர்களின் பதில்**
**““நாங்கள் எவ்வாறு தமிழர்களை இங்கு வாழவிடுவது””**

வரண்டு போனதும், நீர்ப்பாசனத்திற்கான எவ்வித வழியுமற்றதுமான தரையில் இக்குடியிருப்புகள் இருப்பதற்கான தாற்பரியம் இவ்வழியால் செல்லும் பொதுமக்களுக்கு விளங்கவில்லை. அத்துடன் இக்குடியிருப்பாளர்கள் அநியாயமாக படுகொலைக்காளாக நேரிடுமெனவும் இவர்கள் அடிக்கடி குறிப்பிடுவர்.

விமானப்படைப் பிரிவுத் தலைவரின் விளக்கமோ வேறானது. கட்டாந்தரைகளைப் பார்த்து சலித்த விமானப் படையினர் அப்பகுதியில் ஒருசில வளர்ச்சித் திட்டங்களை விரும்பி அரசிடம் வேண்டுகோள் விடுத்தபோது அரசு வாளாவிருந்தது. இதனால் பாதுகாப்பு அமைச்சின் பணத்தைப் பயன்படுத்தி சிங்கள மக்களையும் ஒருசில கலப்புக் குடும்பங்களையும் விமானப்படையினர் தாமாகவே குடியமர்த்தினர் என்றார் அவர்.

ஒரு காலத்தில் தமிழ் மக்கள் அங்கு குடியமர்த்தப்பட்டதாயும் நீண்ட காலத்திற்கு முன்னரே அவ்விடத்திலிருந்து அவர்கள் தப்பிச் சென்றதாயும் அயலிலுள்ள கிராமத் தவர் கூறுகின்றனர். கல்ஓயாத் திட்டத்தில் எஞ்சிப்போனவர்கள் இக் குடியேற்றங்களில் அமர்த்தப்படுகின்றனர். இங்கு வறுமை ஓர் பிரச்சினையாகும். விமானப்படைத்தலைவரின் கூற்றுக்களை நினைவிலிருத்திக் கொண்டு நாம் முன்னைய அறிக்கைகளில் இதே போன்ற திட்டங்களை குறிப்பிட்டதை திரும்பிப் பார்ப்போம்.

ஹபரண – கந்தளாய் வீதியிலுள்ளது, கந்தளாய் – அல்லாய் வீதியிலுள்ளது, தம்பலகாமத்திலிருக்கும் சிங்கபுர ஆகியன மூன்று திட்டங்கள் திருமலை மாவட்டத்தில் முக்கியமானவை. இத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்ட அனைவரும் மற்றைய திட்டங்களில் மேலதிகமாக போன சிங்கள மக்களேயென கந்தளாய் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முதலாவதில் அலுத்ஓயா திட்டத்திலிருந்தும், இரண்டாவதில் அல்லை திட்டத்திலிருந்தும் கந்தளாய், சோமபுர மக்களும் மூன்றாவதில் கந்தளாயிலிருந்தும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இக்குடியேற்றங்கள் அனைத்தும் இராணுவத்தினால் திட்டமிடப்பட்டு சட்டவிரோதமாக நிறைவேற்றப் பட்டன. இறுதியாக கூறப்பட்ட திட்டமானது அரசாங்கத்திலும், அப்போதிருந்த என்ஜீஓ.வினரில் ஒரு பிரிவின் மேலும் இராணுவத்திற்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டது. பாதுகாப்பும், எதிர்கால சுபீட்சமும் கிடைக்குமென கூறப்பட்ட நம்பிக்கையின் அடிப் படையில் வறுமையில் உழன்ற பொதுமக்கள் இத்திட்டங்களுக்கு வந்தனர். இவர்களுக்கு விவசாயத்தால் கிடைக்கும் வருமானம் பூச்சியமே. முதல், இரண்டு திட்டங்களில் உள்ளோர் விறகு பொறுக்கி விற்பதால் வரும் அற்ப வருமானத்தில் வாழ்கின்றனர். அவர்களுக்கு கூப்பன் உதவித்தொகை கிடைப்பதைப்பற்றி நிச்சயம் இல்லை. ஆனால் அரசின் 'ஜனவசிய' உதவித்தொகை (சொந்தத் தொழிலை வளமாக்குவதற்கு வழங்கப்படும் தொகை)யைப் பெரும்பாலோர் பெறுகின்றனர். 'ஜனவசிய' கொள்கைக்கான பலனை அரசு இங்கு எதிர்பார்த்தால் அது தோல்வியே.

கந்தளாய் பா.உ. இராணுவத்தினரின் இவ்வாறான குடியேற்றத் திட்டங்களுக்கு ஒத்துப்போகவில்லை. ஏனெனில் ஏற்கெனவே பற்றாக்குறையாயுள்ள கந்தளாய் வாவி நீர் இக்குடியேற்றத் திட்டங்களால் மேலும் குறைந்துபோனால் தனக்கு சார்பாயுள்ள சிங்களமக்களின் வாக்குகள் கிடைக்காமல் போகலாமென அச்சமுறுகிறார்.

இப்புதிய குடியிருப்புகளுக்கு புலிகள் வருவது இலகு என்பதும் உண்மை. இவ்வருட முதல் பாதிவரை அல்லாய் – கந்தளாய் வீதியிலிருக்கும் மகாவலிப் பாலத்திலும் வெலிஓயாவிலும் இராணுவ ரோந்துப் படையினர் புலிகளால் திடீர்த் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். சர்வதேசக் கருத்துக்களை மதிக்க வேண்டிய தேவை அப்போதிருந்ததனால் குடியேற்றங்களுக்கு மேல் தாக்குதல்களை புலிகள் நிகழ்த்தவில்லை.

ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை விடுத்து, நிர்வாகத்

*மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் (யாழ்) ஐந்தாவது விசேட அறிக்கையின் தமிழாக்கம்*

**கௌசிகன்**

திறமையுடன் இயங்க வேண்டிய அரசானது மாறாக வறுமையில் சிக்குப்பட்டுள்ள சிங்கள மக்களை குடியேற்றங்களுக்காக பாவிப்பதையும் தமிழர்களை பீதிகொள்ளச் செய்வதையுமே தொடர்ந்து செய்கிறது. வெலிஓயாவின் சமீபத்திய நிகழ்வுகள் துகிலுரித்துக்காட்டுவது என்னவெனில் வறியோர் நிவாரணம் – வளர்ச்சித் திட்டம் என்ற சாக்கில் நிகழ்ந்ததெல்லாம் பொலிசார் இராணுவத்தினரின் B – பிரிவாக இயங்குவதாக முறையிடுவதாயின், இக்குடியிருப்புகளில் வாழும் சிவிலியன்களை ராணுவத்தினரின் C– பிரிவாக செயல்படுவதே உண்மை.

அனுராதபுரம், வல்வெட்டித்துறை, குமுதினிப் படகு படுகொலைகளுடன் தயக்க உணர்வுகள் மறைந்து போயின.

(2) வெலிஓயா (மணலாறு)

வடமத்திய மாகாண கால்வாயூடாக 86,000 ஏக்கர் நிலத்திற்கு பாசனவசதி ஏற்படும் வகையில் மகாவலி நீர் பாய்ச்சப்பட்டால் தான் வெலிஓயாத்திட்டம் ஓர் விவசாய குடியேற்றமாக மாற்றப்பட முடியுமென 11ம் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம். பொல்கொல நீர் பற்றாக்குறைவாலும் தொழில் நுட்பப்பிரச்சனைகளாலும் வ.ம.மாகாண கால்வாய் திட்டம் கைவிடப்பட்டது. இத்திட்டமில்லாமல் தண்ணீர் பிரச்சனை பற்றிப் பேசுவது அர்த்தமற்றது. கொக்கிளாய் ஏரியிலிருந்து பெரியாறு (மாஓயா) மூலமாக வரும் நீர் பதவியாத்திட்டத்தில் முடக்கப்படுகிறது. அங்கே ஏற்கனவே பற்றாக்குறை. மணலாற்று நீர் புராதன திட்டமான தண்ணீர் முறிப்பு குளத்துள் முடக்கப்படுகிறது. கியுள்ஓயா நீரானது 2,000 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே போதுமென 1960ம் ஆண்டு கணிப்புகள் தெரிவிக்கின்றன.

சிங்கள மக்களை பெண்கள், குழந்தைகளென்று வேறுபாடற்று படுகொலை செய்யும் செயலை முதன் முதலாக தமிழ்ச்சமூகம் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டது.

88இல் மகாவலித்திட்டம் – L – நடைமுறைப் படுத்தப்பட்டபோது புதிய வடிவத்தை எடுத்தது. கல்ஓயா, அல்லாய், கந்தளாய் போன்ற திட்டங்களில் ஏற்கனவே அங்கிருந்த விவசாயிகள் அப்புறப்படுத்தப்படவில்லை. சிங்கள குடியேற்ற வாசிகள் கல்ஓயா திட்டத்தில் குடியமர்த்தப்பட்டிருப்பினும் அங்கிருந்த தமிழ், முஸ்லிம் விவசாயிகளும் இத்திட்டத்தால் பயனடைந்தனர். ஆனால் வெலிஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது அங்கிருந்த அனைத்து தமிழரும் வெளியேற்றப்பட்டது மட்டுமன்றி, அருகிலிருக்கும் பழந்தமிழ் கிராமமான தென்னமரவடியிலிருந்த தமிழ் மக்கள் அனைவரும் பலாத்காரமாக வெளியேற்றப் பட்டனர்.

1984, நவம்பர் 30ம் தேதி நூற்றுக்கு மேற்பட்ட சிங்கள குடியிருப்பாளர்கள் கென்ற், டொலர் பண்ணைகளில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்க்குழு ஒன்று சிங்கள மக்களை படுகொலை செய்தது இதுவே முதல் தடவையாகும்.

அரச படைகள் ஆயிரக்கணக்கான தமிழர்களை அதன்பின் படுகொலை செய்திருப்பினும் இச்செய்தி சர்வதேச ரீதியாக பிரபலப்பட்டது. விடுதலை இயக்கங்களாக சர்வதேச அங்கீகாரம் பெற விழைந்து நின்ற அனைத்து தமிழ் இயக்கங்களுக்கு குறைந்தளவு தந்திரோபாய ரீதியாகவாவது இவ்வாறான செயல்களை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருந்ததை காணமுடியும். இதேவேளை, 83' கலவரத்தினால் மனச்சாட்சி குத்தப்பட்ட பல சிங்கள மக்களுக்கு வெலிஓயா நிகழ்வுகள் மிகுந்த சங்கடத்தை கொடுத்தன. தேசிய கிறிஸ்தவ சபையின் மதிப்புக்குரிய இரு சிங்கள குருமார் (அதில் ஒருவர் மறைந்த வண.கிளெஸ்ரின் பெர்ணாண்டோ) இச்சம்பவம் அரசாங்கத்தின் தேவையற்ற தூண்டுதலால் நிகழ்ந்ததெனவும் இந்நிகழ்வு குறைந்தளவிலாவது நியாயமான இராணுவ நடவடிக்கை எனவும் கூறத்தயங்கவில்லை.

அச்சமயம் இந்தியாவிலிருந்த புலித்தலைவர் ஒருவரிடம் இத்தாக்குதல்கள் பற்றி கேட்டபோது தங்களது நோக்கம் சிங்கள பொதுமக்களை கொல்வதன்று, வஞ்சனையான நோக்குடன் குடியமர்த்தப்பட்ட கிறிமினல்களே கொல்லப்பட்டனர் என கூறினார். தங்களது அங்கத்தவர்களிடம் பெண்கள், குழந்தைகளை கொல்லக்கூடாதென கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததாயும் அவர் தெரிவித்தார். தாங்கள் ஆண்கள் அனைவரையும் ஓர் கட்டிடத்துள் தள்ளி வெடி மருந்தை மூட்டு முன் ஒரு பெண் தனது கணவனை விட்டு வெளிவர மறுத்ததால் அவளும் கொலையுண்டாள் எனவும் கூறினார். (எப்படியிருப்பினும் குடியேற்றக்காரர்கள் கூற்றுப்படி பெண்களும் குழந்தைகளும் படுகொலை செய்யப் பட்டனர்.)

அச்சமயத்தில் தந்திரோபாய ரீதியிலோ, ஒழுக்கரீதியிலோ அப்புலித்தலைவருக்கும் தாங்கள் சிங்கள மக்களை கொல்பவர்களென கூறுவதில் உணர்வு ரீதியான தயக்கமிருந்தது. அரசு சமயத்திற்கேற்ப தீர்க்க தரிசனத்துடன் நடந்திருந்தால் நிலைமையைக் கட்டுப்படுத்தி தொடர்ந்த அழிவை தடுத்திருக்க முடியும்.

மே 85இல் நிகழ்ந்த அனுராதபுரம், வல்வெட்டித்துறை, குமுதினிப் படகு படுகொலைகளுடன் இத்தயக்க உணர்வுகள் மறைந்து போயின. சிங்கள மக்களை பெண்கள், குழந்தைகளென்று வேறுபாடற்று படுகொலை செய்யும் செயலை முதன்முதலாக தமிழ்ச்சமூகம் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டது. 'துரோகி'களாக கருதப்படும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அழிப்பதற்கு இதன் பின் ஓர் சிறிய நீட்டிப்பே தேவைப்பட்டது. இதன்மூலம் மற்றைய

“துரோகி”களாக கருதப்படும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அழிப்பதற்கு இதன் பின் ஓர் சிறிய நீட்டிப்பே தேவைப்பட்டது.

குழுக்களை அழித்து அதிகாரத்திற்கு வருவதற்கும், இனஅழிப்பு அரசியலை மேற்கொள்வதற்கும் புலிகளுக்கு மேடை அமைத்து கொடுக்கப்பட்டது.

**(3) 25ம் தேதி ஜூலை 93' இற்கு முன் வெலிஓயாவின் உண்மைநிலை**

**3.1 வெலிஓயா 1983 – 1993**

வெலிஓயா பற்றிய உண்மைநிலை சம்பந்தமாக கீழ்க்கண்ட தகவல்கள் பயன்படுகின்றன. இதிலிருந்து வெலிஓயா பற்றிய பல பதில்கள் வெளிவருகின்றன.

80 காலப்பகுதிகளில் பத்திரிகைச் செய்தியில் வெளிவந்தவை, வளர்ச்சித் திட்டங்களில் அனுபவம் மிக்க ஒருவரின் தகவல்கள், ஏப்ரல் 88'இல் முல்லைத்தீவு பிரஜைகள் குழுவால் இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்பட்ட ஆவணம், இச் சமயத்தில் தமிழ்க் குழுக்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள் அனைத்தையும் ஆய்ந்து தொகுக்கும் போது உண்மைநிலை தெளிவாகிறது.

பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் இஸ்ரேலியரின் தூண்டுதலின் பேரிலேயே நிகழ்ந்தனவென பல ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

வெலிஓயாவில் விவசாயத் திற்குரிய நிலங்களெல்லாம் தமிழ் கிராமங்களுக்கு சொந்தமானவை. அல்லது தனிப்பட்ட தமிழராலோ கம்பனிகளாலோ குத்தகைக்கு விடப்பட்டவை. கடைசியாக கூறப்பட்ட வகைக்குள் நாவலர் பண்ணை, சிலோன் தியேட்டர் பண்ணை, ரயில்வே குழு பண்ணை, போஸ்ட் மாஸ்டர் குழு பண்ணை போன்றவை யடங்கும். ஒவ்வொன்றும் 1,000 ஏக்கர்கள் கொண்ட 16 பண்ணைகள் இவ்வாறு இருந்தன. ஒவ்வொன்றும் 10 – 15 ஏக்கர் வரை தனியாருக்கு சொந்தமான நிலங்களும் இருந்தன. 77ம் ஆண்டு கலவரத்தில் பாதிக்கப்பட்ட மலையகத்தமிழர் புனர்வாழ்வுக்கென கென்ற், டொலர் பண்ணைகள் பின்னர் பயன்படுத்தப்பட்டன. இராணுவத்தினரின் துன்புறுத்தலால் ஜூலை 83 கலவரக்காலத்திலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படும் நிலை உருவாகியது. 84இன் நடுப்பகுதிகளில் வவுனியா பொலிஸ் சுப்பிரிண்டண்ட் ஆத்ர்.ஹெரத் என்பவரால் கென்ற், டொலர் பண்ணைகளிலிருந்த தமிழர்கள் விரட்டப்பட்டனர். இத்தமிழர்கள் பயங்கரவாதிகளென குற்றஞ்சாட்டப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சிங்கள மாஜிஸ்கதிகள் இப்பண்ணைகளில் குடியமர்த்தப்பட்டனர். நவம்பர் 84இல் இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதன்பின் 84இல் நத்தார் தினத்திற்கு சற்று முன்பாக 24 மணிநேரத்துள் அனைவரையும் கிராமங்களை விட்டு வெளியேறுமாறு இராணுவம் ஒலிபெருக்கி மூலமாக உத்தரவிட்டது. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கார்நாட்டுகேணி, காயடிக்குளம் ஆகிய கிராமங்கள் இவற்றிலடங்கும். இவற்றில் சில இப்போதைய 'வளர்ச்சித் திட்டங்களாக' காட்டப்படுகின்றன. இவற்றையே நாம் முக்கிய பகுதிகளாக காட்டப் போகிறோம்.

தமிழர் பிரச்சனையை தீர்க்க சிங்கள மாஜிக் கைதிகளையும், மீனவர்களையும் தமிழர் மத்தியில் குடியேற்ற வேண்டும் என்ற அன்றைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியின் கொள்கை நடைமுறைக்கு வந்தது. இக்காலகட்டத்தில் தான் முல்லைத்தீவுப் பகுதியிலேயே இக்கொள்கை தீவிரமாக்கப்பட்டது. இதனை எதிர்க்கும் வகையில் தமிழ் தீவிரவாதிகள் கென்ற், டொலர் பண்ணை படுகொலைகள், கொக்கிளாய், நாயாற்றில் நீண்ட காலம் வாழ்ந்துவந்த சிங்கள மீனவர் படுகொலைகள் மூலமாக பதிலளித்தனர்.

குறிப்பிட்ட சில கிராமங்களில் இராணுவத்தினரின் வெளியேற்ற உத்தரவின் பின்னரும் எஞ்சிய மற்றைய தமிழ்க் கிராமத்தவர்கள் தொடர்ந்து துன்புறுத்தல்கள், கற்பழிப்பு, மந்தைகள் திருட்டு போன்றவற்றை சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அச்சமயம் இராணுவமும் தனது பங்களிப்பை செய்தது. ஒரு மாத காலத்தின் பின் இராணுவம் புகுந்து தனது கட்டுப்பாட்டுக்குள் கிராமங்களை கொண்டு வந்தது.

புதிதாக கிராமங்களுக்கு வருவோர் தடைசெய்யப்பட்டனர். இராணுவம் தமிழ் மக்களுடன் அளவளாவி அவர்களது சுகசேமங்களையும் விசாரித்தது. இதன் உள்ளார்ந்த செய்தி மிக தெளிவானது.

இக்காலகட்டத்தில் ஒதியமலையில் 25 மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்ட சம்பவம் ஓர் உதாரணம். அச்சமயம் இந்திய அரசின் ஒத்தாசையுடன் நடந்த சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட கூட்டணியினர் வெலிஓயா நிகழ்வுகள் பற்றி அரசிடம் கேள்வி எழுப்பினர். பாதுகாப்பு வலையம் ஒன்றை உருவாக்குவதற்காகன ஓர் பகுதி நிகழ்வாகவே சிங்கள மக்கள் அங்கு குடியேற்றப்படுவதாக அரசு பதிலளித்தது.

இஸ்ரேலிய நலன்கள் பேணும் பகுதி அமெரிக்க தூதராலயத்தில் அமைக்கப்பட்டபின் இஸ்ரேலிய ஆலோசகர்களின் வருகை பற்றிய பல கட்டுரைகள் 1984 இலிருந்து எழுதப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் இஸ்ரேலியரின் தூண்டுதலின் பேரிலேயே நிகழ்ந்தனவென பல ஆய்வாளர்கள் தெரிவித்தனர். வீரகேசரிச் செய்தியைக் குறிப்பிட்டு 'சற்றடே ரிவியூ' 8ம் தேதி செப்டெம்பர் 1984இல் பின்வரும் செய்தியை வெளியிட்டிருந்தது.

"ஓர் உயரதிகாரியின் வருகையின் பின்னர் நாயாற்றிலிருந்து கொக்கிளாய் வரை முல்லைத்தீவு வட்டாரத்தில் குடியேற்றம் நிகழ்கிறது". அதே செய்தியில் அரசின் முக்கிய பிரமுகரான மறைந்த டக்ளஸ் லியனகேயின் இஸ்ரேலிய விஜயம் பற்றியும் குறிப்பிட்டிருந்தது. அதே பத்திரிகையில் டக்ளஸ் லியனகேயின் ராஜினாமா பற்றியும் அரசு அவரது இஸ்ரேலிய விஜயத்தை அரசு அங்கீகரிக்கவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தது. அரபு நாடுகளின் செல்வாக்கை இழக்க அப்போது அரசு தயாரில்லை என்பதையே இது காட்டுகிறது.

இப்பகுதியின் யதார்த்தம் என்ன என்புது சற்றடே ரிவியூ டிசெம்பர் 84இல் வந்த இரு செய்திகள் பிரதிபலிக்கின்றது.

புல்மோட்டை: கண்ணிவெடி தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலி. நான்கு பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை.

பதவியா: நான்கு இராணுவத்தினர் கண்ணி வெடிக்கு பலி. நான்கு பயங்கரவாதிகள் பதிலடித்தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இச்செய்திகளை வாசிப்பவர்கள், பயங்கரவாதிகளாக கொல்லப்பட்டவர்கள் அப்பாவி தமிழ் மக்களே என கருதுவர். வடக்கு – கிழக்கு பிரஜைகள் குழு அனைத்தினதும் பதிவேடுகளை அடிப்படையாக கொண்டு 86 ஜனவரி 17ம் தேதி சற்றடே ரிவியூ செய்திகளின்படி அரச படைகள் சராசரியாக 233 தமிழர்களை ஒரு மாதத்தில் கொலை செய்வதாக கூறியது. 1984 இறுதியில் 200 சிங்கள பொதுமக்கள் தமிழ் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இதுவே வழக்கமான வடிவமாக உருப்பெற்றுள்ளது.

ஜுலை 87இல் இந்திய சமாதானப்படை வரும் வரைக்கும் வெலிஓயாவில் என்ன நடக்கிறது என்பது வெளிச்சத்திற்கு வருவதில்லை. முல்லைத்தீவு பிரஜைகள் குழு உறுப்பினர்களும் மற்றைய தமிழ் அரச உத்தியோகத்தர்களும் இந்திய சமாதானப்படை மேஜர் டாடா வின் பாதுகாப்பின் கீழ் வெலிஓயாவிற்கு விஜயம் செய்தனர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் ஓர் அம்சமாக இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்தும் பணி சம்பந்தமாக அவர்கள் சென்றிருந்தனர். சிறிலங்கா இராணுவ அலுவலராக வெலிஓயாவிற்கு பொறுப்பாக இருந்தவர் அங்கிருந்த குடியேற்றங்களை நியாயப்படுத்துவதற்காக விடயங்களை திரித்து கூறினார். மகாவலி திட்டத்தின் கீழேயே இக்குடியேற்றங்கள் நிகழ்ந்ததாக வந்தவர்களுக்கு அவர் கூறினார் பிரஜைகள் குழு இதனை எதிர்த்து அரசாங்கத்திற்கு முறையிட்டது. ஓர் வரண்ட வலயத்திற்கான பயிர்ச்செய்கைத் திட்டம் தான் அது என அரசு பதிலளித்தது. அதுமட்டுமல்ல அங்கிருந்த சிங்கள குடியேற்றக்காரர்கள் அனைவரையும் வாக்காளர்களாக பதிவு செய்யுமாறு வவுனியா, முல்லைத்தீவு உதவி தேர்தல் கமிசனருக்கு உத்தரவிட்டது.

**குடியேற்றவாசிகளில் ஒருவர் தான் 8 வருடங்களுக்கு முன்னர் குருநாகலில் உள்ள அலவ்வ எனுமிடத்திலிருந்து வந்ததாக கூறினார். தனது எம்.பி. தன்னை சேர்த்ததாகவும் தனக்கு 15,000 ரூபாவும் வீடும் நெல்வயலும் தருவதாக உறுதி செய்தாரெனவும் அவர் கூறினார்.**

இந்திய சமாதானப்படையின் வருகையின் பின்னர் இக்குடியேற்ற திட்டங்களுக்கு சட்டரீதியான உறுதி தேவையென அரசு கருதியது. காணி, மகாவலி வளர்ச்சி திட்ட அமைச்சராக இருந்த காமினி திசநாயகா 15ம் தேதி ஏப்ரல் 88இல் அரசவர்த்தமானி மூலம் மகாவலி சட்டம் 79இன் கீழ் 300 சதுரமைல்கள் கொண்ட பரப்பளவை 'விசேட பகுதி'யாக பிரகடனம் செய்தார். இந்தியா – சிறிலங்கா ஒப்பந்தத்தை முன்னின்று செய்த ஒரு அமைச்சரிடமிருந்து இவ்வாறான முடிவு வருவது ஆச்சரியத்தை தந்தது. உண்மை என்னவெனில் இதன் சூத்திரதாரி மகாவலிசபையல்ல இராணுவமே.

இந்த 'விசேட பகுதியின்' மையப்பகுதி 150 சதுரமைல்களை அடக்கும். இப்பகுதி கொக்கிளாய், காற்நாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், குமுழமுனை கிழக்கு, குமுழமுனை தெற்கின் ஒருபகுதி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளின் ஒவ்வொரு பகுதிகளை இணைப்பதுடன் வவுனியா வடக்கு ஏ.ஜீ.ஏ பிரிவில் நெடுங்கேணிக்கு தெற்காகவுள்ள மருதோடை ஊற்றுகுளம் ஆகியவற்றையும் அடக்கும். இந்நிகழ்வால் 2500 – 3000 குடும்பங்கள் இடம்பெயர்க்கப்பட்டன. இப்போது இப்பகுதியின் தற்போதைய நிலையை கவனிப்போம்.

### 3.2 வெலிஓயாவைப் பற்றிய சமீபத்திய உண்மைகள்

இத்திட்டமானது சிங்கள சிவிலியன்களை பலிகொடுத்து இராணுவத்தை பாதுகாப்பதற்கும் படிப்படியாக தமிழரை அங்கிருந்து விரட்டுவதை உறுதிப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டது. 1950இல் பதவியா கொலனித் திட்டத்தின் நீடிப்பே திட்டம் 'L'இன் உள்வடிவமாகும். எஞ்சியிருக்கும் தமிழ் சமுகம் இம்மையப்பகுதிக்கு வடக்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ளது. அணைக்கரை உயர்த்தப்பட்டு, அரணாக இராணுவத்திற்கு பாதுகாப்பு கொடுக்க அதற்குமுன்னால் ஜனகபுர போன்ற குடியேற்ற திட்டங்கள் (ஏறத்தாள 400 குடும்பங்களைக் கொண்டவை)தமிழ்க் கிராமங்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை இராணுவத்திற்கு மனிதக் கேடயங்களாக செயல்படுகின்றன. சிங்கள குடியிருப்புகளுக்கு முன்னால் தமிழ்க்கிராமங்களை நோக்கி (கிழக்கு பக்கமாக) தமிழர்களுக்கு சொந்தமான நிலங்கள் திறந்த வெளியாயுள்ளன. இவ்வெளியில் ஒரு கிணறு 1921ம் ஆண்டு கட்டப்பட்டதென்பது இவ்வெளி 3 தலைமுறைக்கு மேல் பயிர் செய்யப்பட்டுள்ளதென காட்டுகிறது. இந்த வெளிகளுக்கு அப்பால் காடு. காட்டின் அருகே சிறுகுன்றுகள். அங்கிருந்து கடல் தெரிகிறது. அணைக்கட்டு, சிங்கள குடியிருப்புகள், திறந்தவெளி (கிழக்கு நோக்கி) அனைத்தும் இராணுவ பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருக்கின்றது என்பது உறுதி. ஜனகபுர முகாம் தாக்கப்பட்டதற்கு குடியிருப்பாளர்களை பிரிகேடியர் சாடியதற்கான காரணமும் இதிலிருந்து விளங்குகிறது. (4ஐ பார்க்க)

இந்த குடியிருப்புகளை அடைவதற்கு டொலர் பண்ணை மூலமாகதான் போகவேண்டும். (தற்போது பரகும்பர). பொதுவாக வெளியாட்களை இதற்குமேல் அனுமதிப்பதில்லை. இதன் பின்னர் செல்லும் வீதியானது ஒரு 'T' சந்திப்பை அடைகிறது. மூலையில் போதி மரத்தின்

கீழ் சமீபத்தில் வைக்கப்பட்ட புத்தர்சிலை – வெற்றிச்சின்னம். அங்கிருந்து தெற்கான பிரிகேடியர் ஜனக பெரேரா வீதி. எதிர்த்திசையில் ஜெனரல் டென்சில் கொப்பெகடுவ வீதி.

குடியேற்றவாசிகளில் ஒருவர் தான் 8 வருடங்களுக்கு முன்னர் குருநாகலில் உள்ள அலவ்வ எனுமிடத்திலிருந்து வந்ததாக கூறினார். தனது எம்.பி. தன்னை சேர்த்ததாகவும் தனக்கு 15,000 ரூபாவும் வீடும், நெல்வயலும் தருவதாக உறுதி செய்தாரெனவும் அவர் கூறினார். மற்றைய குடியிருப்பாளர்கள் பெரும்பாலும் நலிந்துகொண்டு வரும் பதவியா திட்டத்திலிருந்து வந்ததாக கூறினர். அவர்கள் வரும்போது வீடு கட்டுவதற்கான போதுமானளவு கட்டிட பொருட்கள் வழங்கப்பட்டன. தமிழர்கள் ஏற்கனவே பயிர்செய்து கொண்டிருந்த வயல்களை காட்டி தேவையானளவு அவர்கள் அதில் பயிர் செய்யலாம் எனவும் கூறப்பட்டது.

பயிர் செய்கையை அவர்கள் செய்ததே இல்லையெனலாம். அவர்களுக்கு ஊர்காவல்படை பயிற்சி வழங்கப்பட்டு 'சொட்கன்' ஒன்றும் வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50 வழங்கப்படுகிறது. பெண்கள் துவக்கு தூக்க முன்வந்தால் ரூபா 100 வழங்கப்படும். இந்த விளையாட்டின் முதற்கட்டம் "தமிழர்கள் பயிர் செய்வது குடியிருப்பாளர்கள் அதை பிடுங்குவது" தமிழர்கள் இதனை எதிர்த்தாலோ அல்லது இராணுவத்திடம் முறையிட்டாலோ அடிஉதை. அல்லது கொலை செய்யப்பட்டு பயங்கரவாத முத்திரை குத்தப்படும். எண்பதின் நடுப்பகுதியில் கொலை செய்யப்பட்டு பயங்கரவாதிகளென அரச செய்தி ஸ்தாபனங்கள் கூறிய தமிழர்களெல்லாம் சாதாரண தமிழ் மக்களே என அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த பல வருடங்களாக தமிழ் குடும்பங்கள் கிழக்குப் பகுதியாய் நகர்ந்து காடுகளுக்கும், குன்றுகளுக்குமிடையே சென்று விட்டனர். தற்போது மேற்குப் பக்க மலைகளுக்கிடையே ஏறத்தாள 15 தமிழ் குடும்பங்கள் மட்டும் சீவிக்கின்றனர்.

அங்கிருந்த தமிழ் குடும்பங்களிடம் நீங்கள் நிலத்திற்கு உரிமை பாராட்டுவதாக கூறப்படுகிறதென வினவியபோது அவர்கள் ஆத்திரமுற்றனர். நாங்கள் எதனையும் கேட்கவில்லை. எங்கள் முன்னோர் இங்கு அமைதியாய் வாழ்ந்ததுபோல் நாமும் வாழ விரும்புகிறோம் என கூறினர். சிங்கள குடியேற்ற வாசிகள் சிலரிடம் நீங்கள் ஏன் தமிழர்களை கொடுமைப்படுத்துகிறீர்கள் என கேட்டோம். அதற்கு அவர்களின் பதில் "நாங்கள் எவ்வாறு தமிழர்களை இங்கு வாழவிடுவது"

(தொடரும்)

# வாசகர் களத்தில்

தாகம் ஆசிரியர்கட்கு,

கடந்த மூன்று பிரசுரங்களையும் வாசித்ததில் தாகத்தின் தரம் உயர்வதைக் காண்கிறேன். மேலும் மேலும் தரம் உயர்ந்து தொடர்ந்திட வாழ்த்துகிறேன். கடந்த இதழில் வெளிவந்த சிவா. வித்தியாதரனின் 'பிரித்தானியனின் பரிசு' ஒரு வித்தியாசமான தொடர்கதை. அது மேலும் நகைச்சுவையாக தொடர்ந்தால் அது வாசகர்களை கவரும் என நம்புகிறேன்.

மேலும் தென்னிந்திய சினிமாச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் எம்மவர் மத்தியில் அதைவிட சுவையான விடயங்களும் வாசிப்பதற்கு உண்டென்பதை உணர்த்தும் வகையிலான ஒரு தரமான சஞ்சிகையொன்று இலண்டனில் வெளிவராத ஏக்கத்தை 'தாகம்' தணிக்க வேண்டும் என விரும்புகிறேன்.

மின்னிமின்னி மறைந்துபோன பத்திரிகைகள், சஞ்சிகைகள் போலன்றி தாகமானது காலம் தவறாது எம் கைகளில் தவழ ஆவன செய்ய வேண்டுமென கேட்கிறேன்.

பூரணி
இலண்டன்

ஆசிரியர் கவனத்திற்கு,

தமிழ் மொழியில் தாகம் வெளிவருவதால் மட்டும் தமிழருக்கான பத்திரிகை ஆகிவிடாது. தாகத்தை வெளியிடுவதால் நீங்கள் தமிழராகவும் இருக்க முடியாது.

தமிழீழத்தில் வாழ்வா சாவாவென சிங்கள அரசுக்கெதிராக ஒரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தாகம் போன்ற பத்திரிகைகள் வெளிவருவதேன்?

இந்த யுத்தத்தில் தாகம் எந்தப் பக்கம்?

திலகன்
ரூட்டிங்

**ஆர் குறிப்பு :**

*நாம் தமிழரா, சிங்களவரா, முஸ்லிங்களா என்பது இங்கு முக்கியமல்ல. முதலில் நாம் மனிதராக இருக்க முயற்சிப்போம்.*

*இந்த யுத்தத்தின் ஒரு பரிமாணத்தையே வழமையான பத்திரிகைகளெல்லாம் எழுதுகின்றன. யுத்தத்தின் எல்லாப் பரிமாணத்தையும் பார்க்க வேண்டிய தேவைக்கும் மேலாக ஒரு காத்திரமான வாசிப்புத்தாய் தாகம் வெளிவருகிறது.*

*கடைசியாக உங்கள் கேள்வி தாகம் யுத்தத்தின் எந்தப் பக்கம்.*

*உண்மையில் தாகம் ஒரு நிரந்தரமான சமாதானத்தின் பக்கம்தான்.*

# கவிதையும் காய்கறிக்கூடையும்

ஜே

குலோத்துங்க சோழனின் விருந்தில் சோழனுடன் கம்பரும் அம்பிகாபதியும் ஒட்டக்கூத்தரும் அமர்ந்து உணவருந்தும் போது உணவு பரிமாறிய அரசகுமாரி அமராவதியைக் கண்ட அம்பிகாபதி அமராவதியின் நடையழகில் மயங்கி

"இட்டடி நோவ எடத்தடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய"

என்ற வரிகளைத் தனை மறந்து கூறச் சோழனும் ஒட்டக்கூத்தரும் அது கேட்டுச் சினக்கக் கம்பர் நிலைமையைச் சமாளிக்கக் கவிதையின் பொருளை மாற்றிப் பின்வருமாறு பாடினாராம்:-

கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்"

இளவரசியைக் குறித்த காம ரசப் பாட்டைக் கிழங்கு விற்கும் பெண்ணின் மொழி பற்றிய ரசனையாகக் கம்பர் மாற்றினாலும் சோழனும் கூத்தரும் அதை நம்பத் தயாரக இல்லாததால், கம்பர் கலைமகளைத் தியானிக்கக், கலைமகள் கிழங்கு விற்கும் பெண்ணாக அவ்வேளை வீதி வழியே கூவிக் கிழங்கு விற்றதாகக் கதையுண்டு. இது ரஸமான கதைதான். இத்தகைய கதைகளின் உண்மை பொய்களை யாருமறியார். கவிதை முழுவதும் கம்பரதோ அன்றி அம்பிகாபதியினதோ அன்றி இருவரும் யாத்த கலம்பகக் கவிதையோ நிச்சயமில்லை. எவ்வாறாயினும் வெண்பா முழுவதையும் மீண்டும் ஒருமுறை பார்ப்போம்.

இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசையக்- கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்.

இங்கே ரசனைக்குரிய முக்கியமான பொருள் பேச்சுத்தமிழ். கற்றவர்கட்கு இனிய கவிச்சக்கரவர்த்தி எனப்படும் கம்பர், பேச்சுத் தமிழ் கேட்டு நெகிழ்கிறார் என்றே நாம் இங்கு கொள்ள முடியும். "கொட்டிக் கிழங்கோ கிழங்கு" என்று கூவி விற்கும் போதும் அந்த ஒலி கம்பருக்கு இனிக்கிறது. அது இனிப்பதற்கு அவர் பேச்சு மொழியின் இனிமையை உணர்ந்தவராக இருக்க வேண்டும். பேச்சுமொழியை நிராகரிக்கும் பண்டிதர்களுக்கு இந்த உண்மை இனிக்காது எனவே இளவரசி உணவு பரிமாறுவதும் சரஸ்வதிவந்து சிரிக்கட்டுவதும் வசதியான தப்பும் வழிகள் தான். (இளவரசியின் கால் கொப்பளிக்கிறதை விடக் கிழங்கு விற்பவளது கால் கொப்பளிக்க அதிக நியாயம் உண்டு). சாதாரண மக்களின் பேச்சு மொழி இழிசனர் வழக்கென்று ஒதுக்கப்பட்ட சூழ்நிலையில் அதன் ஆற்றலை இனங்கண்ட புதிய கவிஞர் பரம்பரை ஒன்று உருவானது. அதற்கான உந்துதலைத் தந்த மகாகவிஞர் பாரதி ஆயினும் பாரதிக்கும் வெகு காலம் பின்னரே எளியோரது பேச்சுமொழி ஆக்க இலக்கிய மொழியாகவும் அதை விட முக்கியமாகக் கவிதைக்கு உகந்த மொழியாகவும் தன்னை நிலை நிறுத்தியது. அந்தப் பேச்சுமொழியை ரசித்து எழுதியிருக்கிறார். ஈழத்துக் கவிஞர்களிடையே மரபுக்கும் நவீனத்துவத்துக்கும் ஒரு பாலமாக நாம் கருதக் கூடிய எம்.ஏ நுஃமான். பார்ப்போமா?

## இலைக்கறிக்காரி

லெக்கேறி . . . ரீக் . . . கீ . . . கோ!
என்று தெருவில்
தொலைவில் ஒரு மூடை
சுமந்து நடந்துவரும்
செல்லாளின் கூவல்
தெருவெங்கும் கேட்கிறது

அல்லயலில்
வேலி அடைப்புக்குப் பின் இருந்து
'கொண்டா கா'
என்றொருத்தி கூப்பிட்டாள்

போய்க் கடப்பைத்
தள்ளி விட்டுச் சென்று
தலைச் சுமையைக் கீழிறக்கி
வைத்தாள், முருங்கை மரத்தடியில்

வீதியெல்லாம்
அல்லாடி வந்த அவளின் தளர்ந்த உடல்
காலை வெயிலில்
கசிந்து நனைந்துளது.
சீலைத் தலைப்பால்
சிறிது துடைத்து விட்டாள்

சாக்கில் இருந்த
தளிர்ந்த இலைக்கறியில்
தட்டில் எடுத்து வைத்தாள்
பத்துச் சதத்துக்கு

'நட்டங்கா, இன்னும்
நாலு புடி வை' என்றாள்.
'கட்டா கா' என்றாள் கறிக்காறி,
'எப்பயும் நீ
இப்பிடித்தான் நல்ல அறும்பு'
என்றிவள் சொன்னாள்

'உச்சி வெய்யில்ல
வயல்ல சுழியோடிப்
பிச்சி வந்து விக்கும்
புழைப்பு புள்ள என் புழைப்பு
நாளும் முழுப் பொழுதும்
நாயா அலஞ்சு
சதிரத்தைச் சாறாப் புழிஞ்சா
கிடைக்கிறது
என்னத்துக்காகும்
இரண்டு குமர் கெடக்கு . . .'

முந்தானையில் காசை
முடிந்தபடி எழுந்து
செல்லாளைப் பார்த்து

திரும்பி உட் செல்லுகையில்
'எல்லார்க்கும் கக்கிசம் தான்
என்ன செய்யலாம் ' என்றாள்

'லெக்கேறி . . . ரீக் . . . கீ . . . கோ '
என்று, தெருவில்
தொலைவில் ஒரு மூடை
சுமந்து நடந்து செலும்
செல்லாளின் கூவல்
தெருவெங்கும் கேட்கிறது.

அழகான மட்டக்களப்புப் பேச்சுத் தமிழில் ஒரு அன்றாட உரையாடல் கவிதையாகிறது. ஒரு சம்பவத்தைக் கூறும் நுஃமானின் மொழி அவருக்கே கைவந்த சீரான ஓசை நயத்துடன் பேச்சு மொழிக்கு இசைவான முறையில் உள்ளது. அன்றாட வாழ்வின் ஒரு முக்கியமான அம்சத்தை, உணர்த்தும் ஒரு சம்பவம் எளிமையான தெளிவான பேச்சுமொழியில் ஒரு அழகான கவிதையாகி விட்டது.

கம்பர் இந்த இலைக்கறிக் காரியின் கூவலைக் கேட்டிருந்தால் எப்படிப் பாடியிருப்பாரோ! □

# ஸ்பானிஷ் கலாச்சார விழா

– யமுனா ராஜேந்திரன்

*1994* பெப்ரவரி மத்தியில் தொடங்கி மே *1994* மத்திவரை லண்டனில் பல்வேறு இடங்களில் ஸ்பானிஷ் கலாச்சார விழா மூன்று மாதங்களுக்கு நடக்கிறது.

இதையொட்டி இருபதாம் நூற்றாண்டு கலாச்சார உலகின் மூன்று மேதைகளின் படைப்புகள் காட்சிக்கு முன்வைக்கப்படுகின்றன.

1. பாப்லோ பிக்காஸோவின்
   சிற்பங்கள், ஓவியங்கள் கண்காட்சி
   லண்டன் Tate Gallery இல் நடைபெறுகிறது.
2. அதியதார்த்தவியல் (Surrealism) ஓவியர்
   ஸால்வடார் டாலியின் ஆரம்பகால ஓவியங்கள் கண்காட்சி
   லண்டன் Hayward Gallery இல் நடைபெறகிறது.
3. அதியதார்த்தவியல் (Surrealism) சினிமா இயக்குனர்
   லூயி புனுவலின் திரைப்படங்கள்
   லண்டன்Tate Gallery திரையரங்கில் திரையிடப்படுகிறது.

இந்தச் சிறப்பு நிகழ்ச்சிகள் அன்றி ஓவியர்கள் கோயா, ஜீபரான் போன்றோரின் ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் சமகால இளம் படைப் பாளிகளின் ஓவியங்கள், சிற்பங்கள், புகைப்படங்கள் போன்றன வைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நாடகங்களும், நடன நிகழ்ச்சிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாம் நிற்கும் இந்த இடத்தில் இந்தக் காலத்தில் மனுக்குலத்துக்கு ஸ்பானிஷ் கலாச்சாரத்தின் நன்கொடைகள் மகத்தானவை. 500ஆண்டு காலனிய அடிமைத்தனத்தை தொடங்கி வைத்த நாடும் அதுதான். மேலே குறிப்பிட்ட மேதைகளையும் பாஸிஸ்ட் பிரேங்கோ எதிர்ப்பு படைப்பு களையும் உலகுக்கு அளித்த நாடும் அதுதான். அழகான பெண்கள், காற்றுப்போல் விசிறும் நடனம், இதுவும் ஸ்பானிஷ் கலாச்சாரம்தான்.

ஸ்பானிஷ் கலாச்சார விழாவின் சாராம்சமான படைப் புகளை தாகம் மூலம் தமிழுக்கு அறிமுகப்படுத்த எண்ணம்.

முதன்மையாக பாப்லோ பிக்காஸோவைப் பற்றிய புரிதலுக்காக அவர் பற்றிய படைப்புகள், வாழ்வும், கலையும் பற்றிய மூன்று கட்டுரைகள் தாகத்தில் தொடர்ந்து வரும். இக்கட்டுரைகளின் நோக்கம் அவருடைய கலைப்படைப் புகளைப் புரிந்து கொள்வதற்கான ஒரு அடிப்படையை உருவாக்குவது.

1. பிக்காஸோ
   சமூகவிரோதி மக்கள் எதிரி
2. பிக்காஸோ
   ஓவியம், சிற்பம் – அனுபவம்
3. பிக்காஸோ
   வாழ்வும் கலையும்

இந்த மூன்று கட்டுரைகளும் வாழ்வுக்கும் கலைக்கும் உள்ள இடைவெளியை இல்லாததாக்கி வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் கலைஞனைப் பற்றிய அறிமுக கட்டுரைகள். □

## பிரிட்டிஸ் நீதிபதிகள் எதிர்ப்பு

தற்பொழுது பிரிட்டிஸ் நீதிபதிகளால் அதிகமான குற்றத்தண்டனை ஆபிரிக்க, ஆசிய குற்றவாளிகளுக் குதான் அளிக்கப்படுகிறது.

சிலவேளை குறைந்தபட்ச சட்டமீறல்களுக்குக் கூட அதிக பட்ச தண்டனை வழங்கப்படுகிறது.

ஆகவே நீதிபதிகளுக்கு குறிப்பாக ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா போன்றனவற்றின் கலாச்சாரங்கள் பற்றிய மேலதிக அறிவுக்காக பாடம் சொல்லித்தர சமீபத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நீதிபதிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

முன்னால் Racial Equality Commission இன் கொமிஷனர் நீதிபதிகளின் இம்முடிவை விமர்சிக்கிறார்.

'பிரிட்டிஸ் நீதிபதிகள் பெரும்பாலும் வெள்ளையர் மேட்டுக் குடியினர். தம் வெள்ளைக் கலாச்சாரம் பற்றிப் பெருமிதம் கொள்பவர். இச்சூழலில் பல்கலாச்சார நாடான பிரிட்டன் பற்றிப் புரிந்து கொள்ள பல்கலாச்சார அணுகுமுறை தேவை. அதுவே ஆரோக்கியம்" என்கிறார் அவர்.

# புண்ணியமூர்த்தி

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

> இவன்
> முருங்கை மரத்துக்கு முந்தானையிருந்தால் பிடித்துப் பார்க்கத் தயங்காத தமிழன்!

டானியல் யன்னலால் எட்டிப்பார்த்தான். கீழே கதவு தட்டியவன் புண்ணியமூர்த்தியாகத்தான் இருக்கும் என்று அவனுக்கு தெரிந்திருந்தாலும் கதவு தட்டியவுடன் யன்னலால் எட்டிப் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை.

வெளியில் சரியான மழை பெய்து கொண்டிருந்தது. வீட்டுக்கு முன்னால் ஜன்னலை ஒட்டியிருக்கும் மரத்தின் இலையிலிருந்து நீர்த்துளிகள் ஜன்னலில் கொட்டின.

இந்த மழைத்துளிகளின் மெல்லிய தாளம் இரவில் மிகவும் இதமாக இருக்கும். இரவு மூன்று மணிக்குப் பின் இந்த தெருவில் கார் போவது மிகவும் அருமை. அந்த மாதிரியான அமைதியான நேரத்தில் ஜன்னலைத் தட்டும் நீர்த்துளிகளின் ராகம் மிகவும் ரம்மியமாக இருக்கும்.

டானியல் கதவைத் திறந்தான். அவனின் சினேகிதன் புண்ணியமூர்த்தி கதவினடியிலிருந்த 'கார்ப்பெட்' துண்டில் சப்பாத்தைத் துடைத்தான்.

"என்ன இன்னும் சம்பந்தன் வரவில்லையா" புண்ணியமூர்த்தி டானியலைக் கேட்டபடி முன் ஹோலில் நுழைந்தான். அவன் கையில் ஒரு பிளாஸ்டிக் பாக் இருந்தது. அதனுள் இருந்து இரண்டு 'கசற்று'களை எடுத்து ஹோலில் நடுவில் உள்ள சின்ன மேசையில் வைத்தான். டானியல் அவற்றை எடுத்து என்ன படம் என்று பார்த்தான். "குஸ்புவின் படம் கிடைக்கவில்லை" புண்ணியமூர்த்தியின் குரலில் அவ்வளவு உற்சாகம் இல்லை.

வெளியில் ஒரு கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. சினேகிதர்கள் இருவரும் ஜன்னல் சேலையை நீக்கி விட்டு எட்டிப் பார்த்தார்கள். சம்பந்தன் காரை பார்க் பண்ணிக் கொண்டிருந்தான்.

நீயும் சேர்ந்து அவனுடன் வந்திருக்கலாமே என்று கேட்க நினைத்தவன் கேட்கவில்லை. டானியலும் சம்பந்தனும் இலங்கையில் ஒரு கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். லண்டனுக்கு வரும்போதும் ஒன்றாகச் சேர்ந்து வந்தவர்கள்.

கொழும்பில் எஜென்சிக்காரனைத் தேடுவதிலிருந்து கள்ளப் பாஸ்போர்ட் எடுத்து எத்தனையோ தலைப்பட்டினங்களில் ஏறியிறங்கியவர்கள். டானியல் லண்டனில் ஒரு ரெஸ்ட்ரோறண்டிலும் சம்பந்தன் ஒரு இலங்கை மளிகைக் கடையிலும் வேலை செய்கிறார்கள். புண்ணியமூர்த்தி சம்பந்தன் வேலை செய்யும் கடைக்காரரின் சொந்தக்காரன். அவனும் ஏதோ புத்தகக் கடையில் வேலை செய்கிறான்.

ஞாயிற்றுக் கிழமைகளில் ஒன்று சேர்ந்து படம் பார்த்து, சமைத்துச் சாப்பிட்டு ஊர் 'முஸ்பாத்திகள்' சொல்லி படவிமர்சனம் செய்து, பெட்டைகளைப் பற்றி விமர்சித்துப் பொழுது போக்குவார்கள். டானியல் கிறிஸ்தவன். சேர்ச்சுக்குப் போகாதவன். சமயங்களைக் கேள்வி கேட்பவன். புண்ணியமூர்த்தி பாவங்களையே பேசுபவன், நினைப்பவன், சந்தர்ப்பம் வந்தால் செய்யவும் துணிபவன். இலங்கையில் சின்னப் பையனாக இருக்கும் போது ஏதோ ஒரு இயக்கத்தில் இருந்தவன். சம்பந்தன் ஒரு ஏழைப் பையன். விழுந்து விழுந்து உழைத்து வீட்டில் இரண்டு தங்கைமார்களுக்குச் சீதனம் சேர்ப்பவன்.

டானியல் அடுப்பில் கறி வைத்திருந்தான். கோழிக்கறியின் மணம் மூக்கில் அடித்தது. புண்ணியமூர்த்தி பியர்க் கானுடன் வருபவன். இன்று மழை என்றபடியாலோ என்னவோ வெறுமையாக வந்திருந்தான்.

சம்பந்தனுக்குப் புண்ணியமூர்த்தி கதவைத் திறந்து விட்டான். டானியல் கறியடுப்பைப் பார்க்கப் போய் விட்டான். "என்ன மண்ணாங்கட்டி மழை" சம்பந்தன் தலையை கோதிக் கொண்டான்.

"எப்படி மச்சான் புது வேலை" புண்ணியன் வாய் நிறையச் சிரித்துக் கொண்டு கேட்டான். சம்பந்தன் ஏதோ ஒரு புதுவேலை தேடுவதாகச் சொன்னான்.

"வேலை என்ன கொட்டியா கிடக்குப் பொறுக்கி எடுக்க" சம்பந்தன்.

புண்ணியமூர்த்தியின் முகத்தைப் பார்க்காமல் சொன்னான்.

"குஷ்புவின் படமொண்டும் கிடைக்கல்ல" புண்ணியன் சிரித்தான். புண்ணியனின் வாயில் 'மாங்காய், மாங்காய், இரண்டு மாங்காய் மார்க்கெட்டு போகாத மாங்காய்' பாட்டு அல்லோல கல்லோலப்பட்டது. சம்பந்தன் பதில் சொல்லவில்லை. ரெலிவிஷனைப் போட்டான். பொஸ்னியாவில் தொடரும் சண்டை பற்றி ஒரு வெள்ளைக்கார ரிப்போர்டர் முழங்கிக் கொண்டிருந்தான்.

"வேசைமக்கள் சும்மா முஸ்லிம்களைச் சாக்காட்டுறாங்கள்" புண்ணியன் முணு முணுத்தான். "நாங்களும் தான் ஐம்பதினாயிரம் முஸ்லீம்களை யாழ்ப்பாணத்திலிருந்து அடிச்சுக் கலைச்சுப் போட்டம்"

சம்பந்தன் புண்ணியனைப் பார்க்காமற் சொன்னான்.

டானியல் தான் கடையில் வாங்கி வைத்திருந்த வடைகளைக் கொண்டு வந்து வைத்தான். அதை வைக்கும் போது அந்தக் கடையில் வேலைக்கிருந்த ஒரு பெண்ணின் ஞாபகம் வந்தது. இப்போதுதான் இலங்கையால் வந்த இளம் பெண்ணாக இருக்க வேண்டும். பர பரவென்று பார்ப்பாள். யாரிலோ சந்தேகம் என்பது தெரிந்தது. டானியல் நேற்றுத்தான் அவளைக் கண்டான். வழக்கம் போல் கடையில்

நிற்கும் நடுத்தர வயதுப் பெண்மணி இருக்கவில்லை.

அந்தப் புது இளம் பெண்ணைப் பற்றிச் சம்பந்தனுக்குச் சொல்ல நினைத்தான். புண்ணியமூர்த்திக்கு முன்னால் சொல்லத் தயங்கினான். புண்ணியமூர்த்திக்குப் பெண்களைப் பற்றி உயர்நிலையில் பேசிப் பழக்கமில்லை. சாமான், சரக்கு என்று சொல்வான், அதற்கும் மேற்பட்டால் அதுகள், இதுகள் என்று அடைமொழி கொடுப்பான். புண்ணியமூர்த்தியின் ரசனையில் குஷ்பு விதி விலக்கு, அவளுக்குக் கோயில் கட்டும் பக்தர்களில் அவனும் ஒருத்தனாக இருக்கலாம். குஷ்புவின் குலுக்கலுக்கும் தளுக்கல்களுக்கும் தன்னை மறப்பவன் புண்ணியன். பொஸ்னிய நிகழ்ச்சி முடிய தென்னாபிரிக்கா பற்றிய செய்தி. "இந்த நாய்க் கறுப்பன்கள் பதவியை எடுத்து என்ன செய்யப்போறான்கள்?" புண்ணியன் வடையைக் கடித்தபடி சொன்னான். சிங்களமோடயாக்கள் என்று சிங்கள வர்களைத் தாழ்த்திச் சொல்வதில் சந்தோஷம் கொள்பவன் அவன். "நல்ல வடை மச்சான்" புண்ணியன் முகத்தில் ஒரு இளிப்பு. சம்பந்தன் மேசையில் ஒரு மூலையிற் கிடந்த ஒரு தமிழ்ப் பேப்பரை எடுத்தான்.

வழக்கம் போல முன்பக்கத்தில் இலங்கையில் நடந்த (இரண்டு கிழமைக்கு முன்) அதிரடிபற்றிய நிகழ்ச்சி, அடுத்த பக்கங்களில் அகால மரணங்கள் பற்றியும் ஆட்டுக்கால், கோழிக்கால்களின் விலைகள் பற்றிய விளம்பரங்களும் இருந்தன. நடுப்பக்கத்தில் வெண்பற்கள் காட்டும் தமிழ் நடிகைகள். "இந்த இழவுப் பேப்பரில் என்ன இருக்கு" புண்ணியமூர்த்தி வடையோடு சேர்த்து வார்த்தைகளையும் மென்னினான்.

"என்ன இருக்க வேணும் எண்டு எதிர்பார்க்கிறாய்?" டானியல் எரிச்சலுடன் கேட்டான். புண்ணியமூர்த்திக்கு ஏதும் இலக்கிய தரம் பற்றியோ பத்திரிகை தரம் பற்றியோ ஒரு சிந்தனையுமில்லை. சில வேளைகளில் புண்ணியனை ஏன் தன் வீட்டுக்குள் வரவிடுகிறேன் என்று யோசிப்பான் டானியல். லண்டனிற் தனியாக வாழும் சோகம் யாரோ ஒருத்தருடன் ஒட்டி வாழப் பண்ணுகிறதா?

புண்ணியன் இன்னும் கொஞ்ச நேரத்தில் யாரோ ஒருத்தரைப் பற்றிப் பேசத் தொடங்குவான். பெரும்பாலும் ஒரு பெண்ணைப் பற்றித்தான் பேசுவான். குஷ்புவின் புன்னகைக்கு அப்பால் பெண்மையைத் தெரிந்து கொள்ள முடியாதவன் அவன். கடையில் வடைவிற்கும் பெண்ணைத் தரம் கெட்டுப் பேசத் தயங்காதவன் புண்ணியமூர்த்தி.

சம்பந்தன் முகத்தில் தெரிந்த சோகம் வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது என்று காட்டியது. அம்மாவின் கடிதங்களில் கலங்கி விடுவான் சம்பந்தன். தகப்பன் குடித்து செத்துப் போய் விட்டார். இவன் வீட்டுக்கு உழைக்க வேண்டும். இவனுடைய தமயன் ஒருத்தன் பத்து வருடங்களுக்கு முன் இலங்கை ராணுவத்தினரிடம் பலியாகி விட்டான். அந்தச் சோகம் தான் தகப்பனை குடிக்கப் பண்ணியது என்று இவன் தன்னைச் சமாதானம் செய்து கொண்டாலும் அம்மாவிற்கும் அப்பாவிற்குமிடையில் உறவு ஒன்றும் சுமூகமாக இல்லை என்று இப்போதுதான் உணரத்தொடங்கியிருந்தான். அப்பா ஒரு ஆசிரியர். வன்னி நாட்டில் படிப்பித்துக் கொண்டிருந்தார். பிள்ளைகளின் படிப்பு முக்கியம் என்று அம்மா ஊரோடு தங்கிய போது சம்பந்தனுக்குச் சின்ன வயது. அம்மாவின் துயரம் தெரியாத வயது. வன்னிக் குளக்கட்டில் ஓடி விளையாடிய இன்ப நினைவுகளுக் கிடையில் அம்மாவின் நீர் படிந்த விழிகள் சிலவேளை நினைவிற் தட்டும். ஊர் உலகத்திற்குத் தெரியா விட்டாலும் இவனுக்கு ஏதோ புரிந்தது. அதன் பிரதிபலிப்போ என்னவோ அப்பா மிகவும் சுகவீனமாக ஊருக்கு வந்ததும் கொஞ்ச நாளில் இறந்து போனதும் பெரிய விடயமாகத் தெரியவில்லை. அப்பா வீட்டுப் பொறுப்பில்லாமல் குடித்தபோதும் அம்மா அழுததைப் பார்த்தவனுக்கு அவர் இறப்பில் அவள் அழுகை பெரிதில்லை.

சம்பந்தன் குசினிக்கு வந்தான். டானியல் கறியை இறக்கி வைத்தான். "எப்பிடி வடை." டானியல் நண்பனின் முகத்தைப் பார்த்தான். வடை வாங்கிய கடையிற் கண்ட இளம் பெண்ணைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்தான்.

டானியலுக்குக் குடும்ப சுமை ஒன்றுமில்லை, கடைசிப் பிள்ளை, கால நேரம் வந்தால் காதலிக்கலாம், கல்யாணமும் செய்யலாம். வீட்டில் அம்மா அப்பா இவன் சந்தோசமாக இருந்தாற் சரி என்று நினைப்பவர்கள்.

"தங்கச்சிக்குப் பேசிய கல்யாணம் சரிவரவில்லையாம்" சம்பந்தன் சோகத்துடன் சொன்னான். சம்பந்தன் எப்போதும் நேரே பார்த்துப் பேசுபவன். அவன் கண்கள் சோகமாகத் தெரிந்தது. சம்பந்தனின் தங்கச்சிக்கு இப்போது இருபத்தி எட்டு வயது. வெளியில் உள்ள மாப்பிள்ளைகள் யானைவிலை குதிரைவிலை கேட்கிறார்கள். இவன் உழைத்துக் கொடுக்கிறான். ஆனால் இவன் தங்கை முன்னொரு காலத்தில் யாரையோ விரும்பியிருந்ததாகவும் அவன் இயக்கத்தில் சேர்ந்து இறந்து விட்டதாகவும் அந்தக்கதை இப்போது உயிர்பெற்று ஊர் எல்லாம் பரவி இவள் கல்யாணத்தைக் குழப்பி

**பொஸ்னியாவில் தொடரும் சண்டை பற்றி ஒரு வெள்ளைக்கார ரிப்போர்ட்டர் முழங்கிக் கொண்டிருந்தான்.**

**"வேசைமக்கள் சும்மா முஸ்லிம்களைச் சாக்காட்டுறாங்கள்"** புண்ணியன் முணுமுணுத்தான்.

**""நாங்களும் தான் முஸ்லீம்களை யாழ்ப்பாணத்திலிருந்து அடிச்சுக் கலைச்சுப் போட்டம்""**

விட்டதாகவும் அம்மா சோகத்துடன் எழுதியிருந்தாள்.

"சொறி மச்சான்" டானியல் அன்புடன் சிநேகிதனின் தோளிற் கைபோட்டான். வடை வாங்கிய கடையிற் சந்தித்த இளம்பெண்ணைப் பற்றி பின்னர் ஒருதரம் சொல்லலாம் என்று முடிவு கட்டினான். தற்போதைக்கு வடைவிற்கும் பெண்ணின் நினைவு தனிமையில் தாலாட்டட்டும். "என்னடாப்பா ரகசியம்" புண்ணியன் குசினிக்கு வந்தான். அவன் குள்ளமானவன். அநாவசியமாக எப்போதும் ஒரு சிரிப்பை அவன் முகம் தரித்திருக்கும். ஒரு பெரிய ஜக்கெட் போட்டிருந்தான். அது அவனை இன்னும் குள்ளமாகக் காட்டியது.

அவனுக்கு இரண்டு தமக்கைகள் லண்டனில் இருக்கிறார்கள். இவனுக்குப் பெண்வேட்டை ஆடுகிறார்கள். குஷ்பு மாதிரி ஒரு பெட்டையை இவன் கற்பனை செய்ய, அவர்கள் கைநிறையக் கொடுக்கும் 'யாரையாவது' தேடுகிறார்கள்.

ஒவ்வொருதரமும் வரும்போது தனக்குப் பேசிவந்த பெட்டைகளைப் பற்றிச் சொல்வான். நல்லரக கத்தரிக்காய் வாங்குவதுபோல் சுவாரசியமாகச் சொல்வான். டானியல் எரிச்சலுடன் முணுமுணுப்பான். சம்பந்தன் ஒன்றும் பேசமாட்டான். ஏனென்றால் புண்ணியனின் சொந்தக்காரரின் கடையில் தான் அவன் வேலை செய்கிறான். தேவையில்லாமற் பேசி வேலையையிழக்கத் தயாரில்லை டானியல்.

கோப்பைகளிற் சாப்பாடு போடப்பட்டது.

"மச்சான் இந்த வடை எங்க வாங்கினனி" புண்ணியன் கேட்டான். அவன் சும்மா கேள்வி கேட்க மாட்டான். சூசகமாகச் சொல்ல வெளிக்கிடுகிறான் என்று பட்டது. வடை விற்ற பெண்ணின் பரபரத்த பார்வையில் இவனும் பட்டிருப்பானா?

"தமிழ்க்கடையில் வாங்கினன்" டானியல் புண்ணியனின் முகத்தைப் பார்த்தான்.

"அந்தச் சீலைக் கடைக்குப் பக்கத்தில் இருக்கிற கடையிலா வாங்கினாய்"

புண்ணியனின் கேள்விக்குள் மறைந்து கிடக்கும் விஷமம் டானியலுக்குச் சட்டென்று புரிந்தது.

வடைவிற்கும் கடையிற் சேர்ந்திருக்கும் இளம் பெண்ணைப் பற்றிச் சொல்லப் போகிறான் என்று அவன் உள்மனம் சொல்லிற்று.

புண்ணியனின் சினேகிதம் கிடைத்த நாளிலிருந்து டானியலும் நிறையப் பாவங்களைச் சேர்ந்திருக்கிறான். இவ்வளவு நாளும் ஏன் புண்ணியனுடன் சினேகிதமாக இருந்தேன் என்று டானியல் இப்போது தான் யோசித்தான்.

"நேற்றைய ரெலிவிஷன் செய்தி பார்த்தியா" புண்ணியனின் வாயால் வடையும் வசனங்களும் குதம்பின.

"என்ன செய்தி"

"இந்தியாவில் – தமிழ்நாட்டில் பெட்டைக் குழந்தைகளைச் சாகக் கொல்லுகினமாம்"

புண்ணியன் சிரித்தான்.

பெண் சிசுக் கொலை சிரிப்பான விடயமா இவனுக்கு?

"தெய்வத்தையும் பண்பையும் பற்றிப் பறை சாற்றுகிற தமிழ் நாட்டில் இந்தப் பயங்கரமா" சம்பந்தன் முணுமுணுத்தான்.

தமிழ்நாட்டில் புண்ணியன் போல் நிறையத் தமிழ் ஆண்கள் வாங்கவும் விற்கவும் என்று உறவுகளை விலை பேசும்போது ஏழைப் பெண்களுக்கு எதிர்காலம் இல்லையே!

"இந்தச் செய்தி போனபோது வெள்ளைக்காரன் என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிச்சான் மச்சான்" புண்ணியமூர்த்தி முகத்தில் கோப பாவம்.

"ஜெயலலிதாவுக்குக் கருணாநிதி கோஷ்டி மேடையில் சேலையுரிந்தபோது சிரிச்ச உனக்கு இந்தச் சிசுக் கொலையில் ஏன் கோபம் வரவேணும்"

டானியல் கறியை ருசி பார்த்தான். சரியான உறைப்பு.

"என்னடா மச்சான் சொல்கிறாய் ஜெயலலிதாவுக்குச் சேலை உரிகிறதுக்கும் சிசுக்கொலைக்கும் என்னடா சம்பந்தம்"

"சீதனத்துக்கும் பெண்களைப் பெற்றோல் ஊற்றி எரிப்பதற்கும் உள்ள சம்பந்தம்"

டானியலுக்கு வடை வாங்கிய கடையில் கண்ட இளம் பெண்ணின் கண்கள் ஞாபகம் வந்தன. பரபரவென்று பயத்துடன் துடிக்கும் அந்த விழிகளில் அமைதி தவழ்ந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று யோசித்தான். ஏன் அந்தப் பரபரப்பு? என்னென்ன கஷ்டப்பட்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தாளோ? வழியில் எத்தனை காட்டுமிருகங்களின் வேட்டைக்குத் தப்பினாளோ தெரியாது. வீட்டில் பெரிய குடும்பம் இருக்கலாம். இவள் உழைப்பில் எதிர் காலத்தை நிறுவுபவர்களாக இருக்கலாம். அவளிடம் ஒரு நாளைக்கு இவன் இதெல்லாவற்றையும் கேட்பான் என்று மனம் சொல்லியது.

**தெய்வத்தையும் பண்பையும் பற்றிப் பறை சாற்றுகிற தமிழ் நாட்டில் இந்தப் பயங்கரமா!**

"வடை வாங்கின கடையில் இருக்கிற சரக்கு எப்படி" புண்ணியன் சத்தம் போட்டுச் சிரித்தான். சம்பந்தன் முகத்தில் கோபம். டானியல் முகத்தில் அக்கினி.

இத்தனை காலமாக மழைபெய்யும் பின்னேரங்களில் சேர்ந்திருந்து மலிவான – அழுகலான தமிழ்ப்படங்களைப் பார்த்து நடிகைகளின் குலுக்கல்களில் சிணுங்கல்களில் 'உணர்ச்சி' (?) அடைந்தவர்கள். இன்று புண்ணியனின் பேச்சு அருவருப்பாக இருந்தது. தனக்குத் தெரிந்த பெண்ணைத் தாழ்த்தியபோது தாங்க முடியாமலிருந்தது. முன்பின் தெரியாத யாரோ பெண்களின் முந்தானைகளில் கற்பனையிற் படுத்தெழும்பியவர்கள். அப்போது இப்படியான கேள்விகள் டானியலைத் தாக்கவில்லை. இப்போது புண்ணியன் அன்னியனாகத் தெரிந்தான்.

"என்னடா பேயடிச்சவன் மாதிரி நிற்கிறாய்" புண்ணியன் கோப்பை நிறையச் சோறு படைத்தான். அவன் நிறை குறைப்பது நல்லது என்று எத்தனை பேர் சொல்லியும் கேட்கமாட்டான். சோமாலியப் பட்டினிப் பட்டாளத்துக்கெல்லாம் நான் பதில் சொல்கிறேன் என்பதுபோல் சோற்றுக் கோப்பைகளைக் காவி செல்வான். சிலர் வாழ்வதற்காகச் சாப்பிடுவார்கள், புண்ணியமூர்த்தி போன்றவர்கள் சாப்பிடுவதற்காக வாழ்கிறார்கள். அந்தச் சாப்பாடு அவனைக் சாகடித்துக் கொண்டிருந்தது. பெரிதாக ஒரு படையல், ஏறிட்டு டானியலைப் பார்த்துக் கேட்டான்,

"என்னடா பார்க்கிறாய்? வடைக் கடைமில நின்ற சரக்கு எப்பிடி என்று கேட்கிறன்" விற்பனைகளுக்கு அப்பால் உறவுகளைப் பார்க்கத் தெரியாத முட்டாளா இவன்?

"எனக்கு நீ அப்பிடிக் கேட்டவிதம் பிடிக்கல்ல" டானியல் எரிச்சலுடன் சொன்னான்.

"என்னடா கதைக்கிறாய்? கடைமில சாமானோட சாமானாய் நிற்கிற பெட்டையளை வேறெப்படி கேட்கிறதாம்" இவன் முருங்கை மரத்துக்கு முந்தானையிருந்தால் பிடித்துப் பார்க்கத் தயங்காத தமிழன்!

"அவள் சாமான் இல்ல. உயிரும் உணர்வும் உள்ள பெண்" டானியல் குரல் கடுமையாக ஒலித்தது.

புண்ணியன் பொரியலைக் கடித்துச் சிரித்தான்.

"நீ படுற பரிதாபத்தைப் பார்த்தா ஈரச்சேலையை முகத்தில் போட்டுச் சாக்காட்டுற தமிழ்நாட்டில பெண் குழந்தைகளை எல்லாம் காப்பாற்ற அவதாரம் எடுத்திடுவாய் போல இருக்கு" இப்படிச் சொல்லிவிட்டுப் புண்ணியன் பெரிதாகச் சிரித்தான்.

"உன்போல ஆண்பிள்ளைகளிட்ட வாழ்கிறதைவிட அந்தப் பெண்களைத் தாய்மார் ஏன் அழிக்கிறார்கள் என்பது தெரியாத முட்டாள் நீ" டானியல் முகத்தைத் திருப்பிக் கொண்டு சொன்னான்.

"வடைக் கடைக்காரப் பெட்டையில் ஒரு கண் என்று தெரியுது" புண்ணியன் ஏதோ ஒரு பெரிய நகைச்சுவை கிடைத்ததுபோல் சத்தம் போட்டுச் சிரித்தான்.

"ஓம், அவள் ஓமெண்டா கல்யாணம் செய்வன் நான். நீ இப்ப வாயைப் பொத்து"

புண்ணியன் வாய் மௌனமானது. சம்பந்தன் சோர்ந்திருந்தான். வெளியில் மழை விட்டிருந்தது. □

## அழவிடுங்கள்!

காற்று கொண்டுவந்த சேதி
என் கன்னத்தை அறைந்தது!
அவனைக் கொன்றுவிட்டார்களாம்!
முகம் தெரியாத அந்த முன்னிரவில்
அவர்கள் வந்து
அறிவித்துவிட்டுப் போனதிலிருந்து
அக்கம்பக்கத்து வீடுகளின்
இரவுகள் விழித்தேயிருந்தன.
"உங்கட பிள்ளயின்ர முகத்தைக்கூடப்
பாக்காமல் போயிற்றியளே....."
அவளின் சோகத்தைப் பார்க்கச்
சகிக்காமல்
அழுகையே வாய்விட்டு அழுதது.
"போனவரிசம் சித்திர மாசமே அவனப்
போட்டுட்டம்"
ஏன்?
எதற்காக என்ற கேள்விகளெல்லாம்
சத்தம் வராமலேயே செத்துப்போயின
"கலியாணப்படம் கழுவிவரமுன்னமே
நீங்கள் காணமல் போனியளே..."
அவள் அழுகை தொடர்கிறது
அழும் உரிமை இன்னமும்
அவளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

—நிலா குகதாசன்


விரைவில் வெளிவருகிறது!

## மலையகப் பரிசுக் கதைகள்

கலைஒளி முத்தையாபிள்ளை
நினைவுச்சிறுகதைப் போட்டி

### மலையக எழுத்தாளர்களின்

### 16 சிறுகதைகள்

"உண்ட மயக்கத்திற்கும் உறக்கத்துக்குமிடையிலான
மெத்தை மிதப்புகளுக்கும், போகமறுக்கும்
பொழுதைப் போக்கிக் கொள்வதற்கும் எழுதப்படும்
கதைகள் அல்ல இவை. சிறுகதை என்னும்
கலைவடிவிற்குள் ரத்தமும் சதையுமாகக்
காட்டப்படும் மலையகத்து வாழ்க்கைப் பின்னங்கள்.
....சொந்தமாகாத அந்தக் குத்தகைப் பூமிக்கு
ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு போகும் அவன்
காணும் காட்சிகள்.
தலைகுனிந்து சிரிக்கும் மீதமாகிப்போன சில மரபுக்
கட்டிடங்கள்......

*—தெளிவத்தை ஜோசப்பின் முன்னுரையிலிருந்து*

*தொடர்புகளுக்கு:*

எச். எச். விக்ரமசிங்க
39/21 அல்விஸ் பிளேஸ்
கொட்டாஞ்சேனை
கொழும்பு - 13



*மே மாதம் வெளிவருகிறது!*

## எரியும் வண்ணங்கள்

### புகழேந்தி ஓவியங்கள்

வன்முறைக்கெதிராக சில ஓவியங்கள்

இந்நூலை வெளியிட முன்வரும் நிறுவனம் எதுவும் தமிழகத்தில் இல்லை. எனவே, கூட்டு முயற்சியினால் மட்டுமே இது சாத்தியப்படும். ஆகவே, நன்கொடையாகவோ வெளியீட்டுத் திட்டத்துக்குரிய முன் பணமாகவோ நீங்கள் உதவலாம்.

முன் வெளியீட்டுத் திட்ட விலை ரூ. 50-00

தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48 இராணி அண்ணா நகர், சென்னை 78, இந்தியா.

# சந்திரசேகரன் பிணை விவகாரம்

## சட்ட, அரசியல் பிரச்சினைகள் ஒரு அலசல்

### தோட்டக்காட்டான்

மலையக மக்களுக்கு துணிச்சலோடும் நேர்மையோடும் தலைமை தாங்கக் கூடிய புதிய மாற்றுத் தலைவன் என பரவலாக எதிர்பார்க்கப்பட்ட சந்திரசேகரனின் அரசியல் நேர்மை சந்தேகத்திற்குரிய ஒன்றாக மாறியிருக்கிறது.

இன்று அவர் அரசியல் வட்டாரங்களின் கடும் விமர்சனத்திற்குள்ளாகி வருகிறார். அடிக்கடி அரசின் அடக்குமுறைக்கு உள்ளானதால் மலையக இளைஞர்களின் ஆதர்ச வீரபுருஷனாக மாறி வரும் பெரும் அனுதாப அலைஒன்று உருவாகியிருந்த வேளையில் - அவரது அரசியல் சறுக்கல் அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

சந்திரசேகரன் 1990ல் ஒரு தடவை திடீரென கைது செய்யப்பட்டார். அதற்கான காரணம் இதுவரை கூறப்படவில்லை. அதன் பின்னணியில் அரசியல் பழிவாங்கல் இருந்தது. அதற்கெதிராக மலையக மக்கள் முன்னணி மக்களை அணிதிரட்டி போராடியது. எதிர்கட்சிகளும் ஜனநாயக பத்திரிகைகளும் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தன. இதன் பயனாக ஒரு வாரத்திற்குள்ளாகவே அவர் விடுதலையானார். அன்று ஏற்பட்ட பிரபல்யம் அவரை அரசியல் பிரமுகர் வரிசைக்கு உயர்த்தியது.

1990ல் மீண்டும் ஒருமுறை அவரும் மலையக மக்கள் முன்னணியின் மற்றுமிரு தலைவர்களான B.A.காதர், V.T.தர்மலிங்கம் ஆகியோரும் கூட்டுப்படை தலைமையக குண்டு வெடிப்பு சம்பவத்தின் சூத்திரதாரி என சந்தேகிக்கப்பட்ட வரதன் என்பவருக்கு புகலிடம் வழங்கியதாகக் கூறி கொழும்பு பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். மலையகத்தில் இக்கைதை கண்டித்து வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் உண்மை நிலையறியாது தயக்கம் காட்டிய எதிர்கட்சிகள் பின்னர் இவர்களது விடுதலைக்காக குரல் கொடுத்தன. சர்வதேச மன்னிப்பு சபை போன்ற பலம் வாய்ந்த மனித உரிமைகள் ஸ்தாபனங்கள் தலையிட்டன. எனினும் இவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

மலையக மக்கள் முன்னணி தலைவர்கள் மூவரும் தொடர்ந்த மனித உரிமை மீறல் வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் இவர்களது கைதும், இவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதும் சட்டவிரோதமென கூறி நஷ்டஈடு வழங்குமாறு கட்டளையிட்டது. அப்போதும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

கண்டி மேல் நீதி மன்றில் இம்மூவருக்கும் எதிராக வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கை கொழும்புக்கு மாற்றுமாறு இவர்களது சட்டத்தரணிகள் சட்டமா அதிபரிடம் கோரினர். பாதுகாப்பு காரணம் காட்டி இவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

கடந்த மாகாணசபை தேர்தலில் சிறையிலிருந்து கொண்டே போட்டியிட்டு சந்திரசேகரன் வெற்றி பெற்றார். இது ஒரு பாரளுமன்ற தேர்தல் அல்லாத போதும் தேர்தல் ஒன்றில் சிறையில் இருந்து கொண்டு போட்டியிட்டு வெற்றிபெற்றது இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும். இவரை சத்தியபிரமாணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு மேல்நீதிமன்ற நீதிபதி வீரசூரிய உத்தரவிட்டார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது பாதுகாப்பு காரணங்களைக் காட்டி பாதுகாப்பு அமைச்சு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை வாபஸ் பெறச் செய்தது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு சத்திய பிரமாணம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டதை எதிர்க்கட்சிகளும், வெகுஜன பத்திரிகைகளும் கண்டித்தன. அரசு அசையவில்லை.

சந்திரசேகரன் இவ் அநீதிக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். பயனில்லை.

ஆயினும் அதே அரசு சந்திரசேகரனின் தங்கையின் திருமணத்தை காரணங்காட்டி கடந்த 18.03.94ல் அவரை பிணையிலே விடுதலை செய்துள்ளது.

சுதந்திர கட்சி எம்.பியான மகிந்த ராஜபக்ச சிறையில் இருக்கும் போதுதான் அவரது தாயார் காலமானார். அவருக்கு பிணை வழங்கப்படவில்லை. தடுப்புக்காவலில் இருக்கும் ஒருவரின் ரத்த உறவினர் இறந்துவிட்டால் கூட பாதுகாப்பு அமைச்சு அனுமதித்தால் மாத்திரமே அவரை பொலிசார் அழைத்துச் சென்று பிரேதத்தைக் காட்ட முடியும். இதை காரணமாக வைத்து பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது.

சட்டம் அப்படி இருக்க சத்தியபிரமாணம் செய்வதை பாதுகாப்பு காரணங்களைக் காட்டி தடுத்த அரசு சந்திரசேகரனை தங்கையின் திருமணத்திற்கு பிணையில் செல்ல அனுமதித்தது எப்படி?

### *சட்டப் பிரச்சினைகள்*

இப்பிணை சட்டரீதியானதா என பிரபல சட்டத்தரணி ஒருவரிடம் வினவியபோது பெயர் குறிப்பிட விரும்பாத அவர் கூறிய சட்ட விளக்கம் வருமாறு:

"தடுப்புக்காவலிலே இருவகை உளது. ஒன்று - Preventive detention - ஒருவர் குற்றச்செயலில் ஈடுபடாமல் தடுப்பதற்கானது. மற்றது - Punitive detention - தண்டனை வழங்கப்பட்ட ஒருவரை தடுத்து வைப்பதற்கானது. கைது செய்யப்பட்ட ஒருவர் நீதிமன்றால் தண்டிக்கப்படும் வரை அல்லது விடுதலை செய்யப்படும் வரை அவசர கால பிரமாணங்களின் கீழ் அல்லது பயங்கரவாத

# சத்தியபிரமாணம் செய்வதை பாதுகாப்பு காரணங்களைக் காட்டி தடுத்த அரசு

# சந்திரசேகரனை தங்கையின் திருமணத்திற்கு பிணையில் செல்ல அனுமதித்தது எப்படி?

தடைசட்டத்தின் கீழ் (Preventive detention) பாதுகாப்பு காரணங்களுக்காக தடுத்து வைக்கப்படலாம்.

ஒருவருக்கு பிணை வழங்க முடியாதா என்பது இத்தடுப்பு காவல் கட்டளைகள் வாபஸ் பெறப்படுமா இல்லையா என்பதையும் எந்த சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதையும் பொருத்து தீர்மானிக்கப்படுகிறது. உதாரணமாக அவசரகால சட்ட விதிகளின் கீழ் வழக்கு தொடரப்பட்ட ஒருவருக்கு மேல்நீதிமன்ற நீதிபதியால் பிணை வழங்க முடியும். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் 17(1) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடுப்புகாவல் கட்டளையை ரத்து செய்யும் அதிகாரம் அவருக்கில்லை. எனவே நீதிபதி பிணையில் செல்ல அனுமதித்தாலும் தடுப்புக்காவல் கட்டளையை பாதுகாப்பு செயலாளர் வாபஸ்பெறும் வரை அவர் காத்திருக்க வேண்டும்.

ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்ட ஒருவரை பிணையில் செல்ல அனுமதிக்கும் விதிகள் கிடையாது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் இருவிதிகள் இவ்விடயம் தொடர்பானவை.

(1) பயங்கரவாத தடைசட்டத்தின் (ப.த.ச) 6(2) விதிகளின்படி இச் சட்டத்தின் கீழ் குற்ற மிழைத்துள்ளதாக கருதப்படும் ஒருவர் நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு வழக்கு விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் (Remand) வைக்கப்படுவார். அதாவது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒருவரை தேசிய பந்தோபஸ்துக்கு ஆபத்தானவர் எனக்கருதி தடுப்புக்காவலில் (Detention) அவரை வைக்குமாறு கட்டளை பிறப்பிக்காத நிலையில் கூட பிணையில் அவரை விடுதலை செய்யும் அதிகாரம் எந்த நீதிமன்றத்திற்கும் கிடையாது. ப.த.சட்டம் மனிதாபிமானத்திற்கு முரணான ஒன்று என ஜனநாயக சக்திகள் குற்றம் சாட்டுவதற்கு இந்த பிணை மறுப்பு நிலையே பிரதான காரணமாகும்.

(11) பத.சட்டத்தின் 19ம் பிரிவின் கீழ் இச்சட்டத்தின்படி தண்டனை பெற்ற ஒருவர் அத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்துவிட்டு பிணை கோரலாம். அப்பீல் நீதிமன்றம் விசேட நிலைமைகளில் அப்போது பிணை வழங்கலாம்.

மற்றபடி பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்ட ஒருவரை பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது. நீதிபதிக்குரிய சிறப்பதிகாரத்தைப் (DISCRETION) பயன்படுத்தி பத.சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவரை பிணையில் விடுதலை செய்யமுடியுமா?

ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மாத்திரம் முடியும். அதாவது ப.த.ச. கீழ் சிறுகுற்றம் புரிந்ததாகக் கருதப்பட்டு 5ம் பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்ட ஒருவரின் வழக்கு விசாரணை முடிவுற்று தீர்ப்பு மாத்திரமே வழங்கப்பட வேண்டிய நிலையில் நடைமுறை சிக்கல்கள் காரணமாக தீர்ப்பு வழங்குவது தாமதமாகும் என நீதிபதி கருதினால், அவரை விடுதலை செய்வதாக அல்லது சிறுதண்டனை அல்லது ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங்குவதாக அவர் தீர்மானித்து விட்ட நிலையில், அரச தரப்பில் ஆட்சேபனை இல்லை என்றால் பிணை வழங்கலாம்.

இனி சந்திரசேகரனின் பிணை விவகாரத்திலுள்ள சட்டப் பிரச்சினைகளையும் ஏனைய பல அம்சங்களையும் பார்ப்போம்.


(1) சந்திரசேகரன் மீது பத.சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். சாதாரண வழக்கில் "ராஜதுரோக" குற்றச்சாட்டு என்பார்களே, அதற்கு நிகரான பாரதூரமான குற்றச்சாட்டு இது. இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் 5 வருடங்களுக்கு குறையாத தண்டனையே வழங்கப்பட முடியும். 20 வருடம் வரையிலான கடுங்காவல் தண்டனை வழங்கலாம். தண்டிக்கப்பட்டவரின் சொத்துக்களை பறிமுதல் செய்யலாம். இப்பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவரை வழக்கு விசாரணை முடிந்து நிரபராதி என்பது தீர்மானிக்கப்பட்ட பின்னர் தீர்ப்பு வழங்கி விடுதலை செய்வதில் நடைமுறை சிக்கல் காரணமாக தாமதம் ஏற்படுமென நீதிபதி கருதும் பட்சத்தில் நீதிபதி தனது சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி பிணை வழங்கலாம். அரசதரப்பு ஆட்சேபித்தால் முடியாது.

சந்திரசேகரனின் வழக்கு விசாரணை முடிவடையவில்லை அவரது "வொயர் பயர்" விசாரணையே நடைபெறுகிறது. அதன் தொகுப்புரை கூறமுடியாத நிலையில் நீதிபதி அவரை விடுதலை செய்வது பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க முடியாது. வரவும் கூடாது. இந்நிலையில் அவருக்கு தனது சிறப்பதிகாரத்தைப் பிரயோகிக்க முடியாது.


(11) நீதிபதி பிணை அனுமதி வழங்கிய பின்னரும் பாதுகாப்பு செயலாளரால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் கட்டளை வாபஸ் பெறப்படும் வரை ஒருவர் விடுதலை பெறமுடியாது. உதாரணமாக ஜே.ஓ.சி. வழக்கில் சிறுகுற்றமிழைத்ததாக 5ம் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த என்.சண்முகநாதன் என்பவருக்கு விசாரணை முடிவில் நீதிபதி ஜயசூரிய பிணை வழங்கிய போதும் அவர்மீதான தடுப்புக்காவல் கட்டளை பாதுகாப்பு

(தொடர்ச்சி 18ம் பக்கம்)


# லண்டன்






# சுவரொட்டிகள்



புலியை நேசிப்பது புலிகளை அல்ல
மத்தையாவை தான் தின்னும்
16-01-1994 தைப்பொங்கலா? தீபாவளியா?
மத்தளை நேசித்த மாத்தையாவுக்கு மரண தண்டனையா?
இது பிறந்துவிட்ட கடந்து போன 20 வருடத்தின் அர்த்தம் தான் என்ன?




at the poi
h to a better
Read the
uth.
Militant
40p




16-01-1994
தைப்பொங்கலா?
தீபாவளியா?

(சந்திரசேகரன் பிணை.... 15ம் பக்க தொடர்ச்சி)
அமைச்சின் செயலாளரினால் வாபஸ் பெறப்படும்வரை பல வாரங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஆனால் சந்திரசேகரனின் தடுப்புக்காவல் கட்டளை முறைப்படி ரத்து செய்யப்படாமலே உடனடியாக பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சந்திரசேகரன் மக்கள் போராட்டத்தால் அல்லது நீதிவிசாரணையால் விடுதலை பெற்றிருந்தால் நாம் அவரை வாழ்த்தியிருப்போம். வரவேற்பு வழங்கியிருப்போம்.

(III) நியாயத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் பெயர்போன நீதிபதி D.B.வீரசூரிய அரசியல் நோக்கோடு இப்பிணையை வழங்கவில்லை. தான் முன்னர் சந்திரசேகரனுக்கு சத்தியபிரமாணம் செய்வதற்கு வழங்கிய அனுமதி தடைசெய்யப்பட்டதை சுட்டிக்காட்டி நீதிமன்றை கேலி கூத்தாக்க வேண்டாம் என ஆத்திரத்தோடு கூறி பிணை மீதான மனுவை முதலில் நிராகரித்த அவர், இப்பிணை விவகாரத்தில் அரசு எதிராக செயற்படாது என அரசதரப்பு சட்டவாதி பாதுகாப்பு அமைச்சின் சார்பில் உறுதியளித்து பிணை வழங்கப்பட வேண்டும் என பிரதிவாதிகளின் தரப்பை விட பிடிவாதமாக வலியுறுத்திய வேளை பிரதிவாதிகள் தரப்பின் மனிதாபிமான கோரிக்கையை கருத்திற் கொண்டு முழு பொறுப்பையும் அரசதரப்பின் மீது சுமத்தி இப்பிணைக்கான அனுமதியை வழங்கினார்.

அ) நீதிபதியின் இத்தீர்ப்பை மனிதாபிமானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சட்டமீறல் என்றே வர்ணிக்க முடியும். ஏனெனில் சட்ட அடிப்படையில் அன்றி அரசு ஆட்சேபிக்காது என்ற உறுதி மொழியின் அடிப்படையிலேயே "ஒரு மீறலாக" இப்பிணைக்கான அனுமதி நீதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

ஆ) சட்டமா அதிபர் திணைக்களம் மீண்டும் ஒருமுறை அரசின் சதுரங்க விளையாட்டின் பகடைக்காயாக செயற்பட்டிருக்கிறது.

## *எமது நிலைப்பாடு*

நாம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என தொடர்ச்சியாகக் கோரி வந்துள்ளோம். எமது எதிரிகள் கூட அரசியல் காரணங்களுக்காக சிறைகளில் தடுத்து வைக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. சந்திரசேகரன் பிணையிலே விடுதலையாகி தனது தங்கையின் திருமணத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைத்ததை நினைத்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அந்த மகிழ்ச்சியை விட அவர் அரசிடம் மண்டியிட்டதை நினைக்கும் போது ஏற்படும் கவலையே அதிகரிக்கிறது.

சந்திரசேகரனும் ஏனைய மலையக மக்கள் முன்னணி தலைவர்களும் கைது செய்யப்பட்ட விதம், சுமார் மூன்று வருடங்களாக அவர்கள் சிறையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருத்தல் ஆகிய அனைத்துமே அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள். இதை நீதிமன்றம் கூட ஒத்துக் கொண்டிருக்கிறது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களில் ஒருவரான பாவா அப்துல் காதரின் "வொயர் டயர்" விசாரணையில் மிகவும் துணிச்சலான தீர்ப்பொன்றை வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன் "இவரது வழக்கின் பின்னணியில் அரசியல் ஒன்று இருப்பது தெளிவாகத்தெரிகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

அவர் செல்லச்சாமியின் தரகு வேலையால் டி. பி. விஜய துங்கவின் தயவால் விடுத லைப் பெற்றதை வெட்கக் கேடான செயல் என வெளிப் படையாகக் கூறுகிறோம்.

நாம் இவர்கள் மீதான அரசியல் பழிவாங்கலையும் அடக்குமுறையையும் கண்டித்து இவர்களின் விடுதலைக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்துள்ளோம். தனிநபர் அபிமானத்தினாலன்றி சமூகக் கடமை என்ற ரீதியிலேயே இவ்வாறு செய்தோம். இனியும் தொடர்வோம்.

ஆனால்... சட்டத்துறை என்பது தனக்கு சார்பாக நடந்து கொள்ளும் போது கருணை காட்டவும், தன்னை எதிர்த்து நியாயம் கேட்கும்போது பழிவாங்கவாகவும் அரசின் கருவியாக மாறுவதை நாம் கண்டிக்கிறோம். சந்திரசேகரன் மக்கள் போராட்டத்தால் அல்லது நீதிவிசாரணையால் விடுதலை பெற்றிருந்தால் நாம் அவரை வாழ்த்தியிருப்போம். வரவேற்பு வழங்கியிருப்போம்.

ஆனால்... அவர் செல்லச்சாமியின் தரகு வேலையால் டி. பி. விஜயதுங்கவின் தயவால் விடுதலைப் பெற்றதை வெட்கக்கேடான செயல் என வெளிப்படையாகக் கூறுகிறோம்.

இன்று தென்மாகாண சபை தேர்தல் முடிவுகள் சந்திரசேகரன்–அரசு கள்ள உறவை இருதரப்பும் மூடிமறைக்க வேண்டிய ஒரு சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. ஆயினும் இந்த களங்கத்தோடுதான் சந்திரசேகரன் தனது எஞ்சிய ஆயுள்காலம் முழுவதும் வாழ்ந்தாக வேண்டும். வரலாற்றுக்கு அவர் பதில் சொல்லியே ஆகவேண்டும். □

# லேக்ஹவுஸும் அந்நியச்செலாவணியும் ஈழத்து தேசிய இலக்கியமும்

**அஸ்வகோஷ்**

"தேசிய இலக்கியமும் மரபுப்போராட்டமும்" என்ற சுபைர் இளங்கீரனின் கட்டுரைத் தொகுப்பினை அண்மையில் இலங்கை வானொலி "கலைப்பூங்கா"வில் கலாநிதி. பொ. பூலோகசிங்கம் விமர்சித்தது சுவாரஸ்யமாயிருந்தது. "ஈழத்து முற்போக்கு இலக்கியம் : வரலாறும் சாதனைகளும்" என்று இளங்கீரனின் இன்னுமொரு நூலும் விரைவில் வெளிவரவிருப்பதாக அறிவதில் மகிழ்ச்சியே. "ஈழத்துத்தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கையும் செல்நெறியையும் உருவாக்குவதிலும் நிர்ணயிப்பதிலும் மகத்தான வரலாற்றுப் பாத்திரத்தை வகித்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இன்றைய கட்டத்தில் மேலும் உத்வேகத்துடனும் செயல்திறனுடனும் செயற்பட வேண்டிய கடப்பாட்டைத் தன்னுள் கொண்டுள்ளது" என்ற பிரகடனத்துடன் இ. மு. எ. ச. ஏடான "புதுமை இலக்கியம்" அதன் 19வது இதழை (அக்-டிச 1993) வெளியிட்டிருக்கிறது. (அதன் 18வது இதழ் எப்போது வெளியானது என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டதில் உதிர்ந்த மயிரில் ஒரு VIG செய்து கொள்ளலாம். இ. மு. எ. ச. மத்தியகுழு உறுப்பினர் என்று பிரான்சில் LETTER PAD அடித்து வைத்திருக்கும் எழுத்தாளரிடம் கேட்டுப் பார்க்கலாம்.)

1950களின் பிற்கூறில் ஈழத்துத் தேசிய இலக்கியத்தில் என்ன நடந்தது என்று இளைய தலைமுறைக்கு விளக்கம் தரும் வித்தகர்கள் இ. மு. எ. சங்கப் புராணம், கைலாசபதி மகாத்மியம் என்கிற எல்லைக்கு அப்பாற் பார்வையை வீச முயன்றதே கிடையாது. அக்கால கட்டத்தின் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையின் சரியான பின்னணியில் தனிநபரோ அல்லது ஸ்தாபனமோ ஈழத்து இலக்கிய வரலாற்றில் எத்தகைய பங்கினை வகித்தனர் என்பதை அவற்றிற்குரிய அழுத்தத்தோடு எழுதுவார் எவருமில்லை. எல்லாம் அளவு கெட்டுப் பிரதிபலிக்கப்பட்ட விகாரப் பிம்பங்களாகவே தெரிகின்றன.

கைலாசபதி ஈழத்தின் தேசிய இலக்கியக் கோட்பாட்டை விளக்கி மண்வாசனை (எஸ். பொ. வின் "புழுதி வாசனை" யைக் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை) யுள்ள இலக்கியத்தின் பெருமையை எடுத்துச் சொன்னதாகவும் அவர் தினகரனில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவர்தான் எழுத்தின் மண்மணம் கமழும் ஆக்கங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து ஈழத்தின் தேசிய இலக்கியத்தின் செல்நெறியை நிர்ணயித்ததாகவும் கர்ண பரம்பரைக் கதை மாதிரி சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

இது தொடர்பாக நம் முன் எழும் இரண்டு வினாக்களுக்கு விடை காணுவது அவசியமாகிறது.

1) கைலாசபதி தினகரனின் ஆசிரியராக வருவதற்கு முன் தினகரனில் ஈழத்து ஆக்கங்கள் இடம் பெறவில்லையா?

2) கைலாசபதி தினகரனில் ஆசிரியராக இருந்த ஒரு காரணத்தால் தான் தினகரனில் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்கள் இடம் பெற்றனவா?

அண்மையில் வெளிவந்துள்ள இ. சிவகுருநாதனின் "இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி" என்ற நூல் இந்த வினாக்களுக்கு விடை காண ஓரளவு எங்களுக்குத் துணை புரிகிறது.

திரு. இ. சிவகுருநாதன் கைலாசபதி தினகரனில் பணியாற்றிய காலத்திலும் அங்கு பணி புரிந்தவர். கைலாசபதிக்குப் பின் தினகரனின் பிரதம ஆசிரியராக 38 ஆண்டுகள் பணி புரிந்தவர். சட்ட வல்லுநர். பல ஆண்டுகளாக இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர். அவர் தனது எம். ஏ. பட்டத்திற்கு மேற்கொண்ட ஆய்வே இந்நூலாக வெளி வந்துள்ளது. தினகரனின் தோற்றமும், தோற்றகாலச் சமூக அரசியற் சூழலும் இலங்கையின் தேசிய வளர்ச்சி நிலைகளில் தினகரனுக்குரிய இடமும் இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சியில் தினகரனின் பங்கும் பற்றி இந்நூல் விபரிக்கிறது. சுவாரஸ்யமான தகவல்கள் நிறையவே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

1959-1961 வரையிலான இரண்டு ஆண்டு காலப் பகுதியில் கைலாசபதி தினகரனின் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

1950களிலேயே தினகரன் ஈழத்து ஆக்கங்களுக்குத் தனி முதன்மையளித்து வந்திருப்பதை இ. சிவகுருநாதனின் இந்நூல் ஆதாரங்களுடன் நிறுவுகிறது.

இ. சிவகுருநாதன் எழுதுகிறார்:

"ஐம்பதுகளிலேயே இலங்கையின் உரைநடை இலக்கியத் துறையினில் பெருமாற்றம் ஒன்றினை ஏற்படுத்துவதிலே 'தினகரன்' முன்னிடத்தைப் பெறலாயிற்று என்பதனை அவ்விதழிலே வெளியாகிக் கொண்டிருந்த ஆசிரிய தலையங்கங்கள், செய்தி விவரணங்கள், கட்டுரைகள் என்பன தெளிவாக நிரூபித்தன. எடுத்துக் காட்டிற்கு சில கட்டுரைகள்:

1. தமிழில் முதன்முதலாக வெளிவந்த கலைக்களஞ்சியம்.
   –பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
2. முருகனென்னும் நாமம் முருகனாம் முதல்வனுக்கு கிட்டியதேன்?
   –நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
3. புகையிலை மீது புலவர் கொண்ட மோகம்.
   –நடராசா
4. பெண்களுக்கு பெருந்தன்மை அளிக்கும் கற்பு.
   –மகாவித்வான் சி. கணேசையர்
5. நாட்டுப்பாடல்கள் செறிந்திலங்கும்...
   –பேராசிரியர். சு. வித்தியானந்தன்
6. சைவசமயத்தாரின் தனிப்பெரும் பொக்கிஷம்.
   –வித்துவான் வேந்தனார்
7. ஞானப்பள்ளு.
   –நடராசா
8. வாழையும் புலவனும்.
   –சோமசுந்தரப் புலவர்

(தொடர்ச்சி... 30ம் பக்கம்)

# மூன்று சினிமாக்கள்

யமுனா ராஜேந்திரன்

## இல்மஸ் குணே

இல்மஸ் குணேயின் மறைவினால் மூன்றாம் உலக சினிமாவுக்கு மிகப்பெரிய சோகம் நிகழ்ந்திருக்கிறது. தனித்துவமான, இலட்சக்கணக்கான மக்களைச் சென்றடைந்த வெகுஜன இடதுசாரி சினிமாவின் பிதாமகன் அவன். இடதுசாரி கலை இலக்கிய சினிமா வரலாற்றுக்கு நேர்ந்திருக்கும் இன்னொரு மகத்தான சோகம் அவருடைய படைப்புக்கள் துருக்கி ராணுவ அடக்குமுறை அரசினால் அழிக்கப்பட்டு விட்டது என்பதுதான்.

வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்ட அவருடைய 10 படங்களைத் தவிர, இதில் The Herd, Yol, The Wall மூன்றும் அடங்கும். பிற அவரது 300க்கும் மேற்பட்ட படங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இல்மஸ் குணே சினிமா இயக்குனர். கம்யூனிஸ்டு போராளி. துருக்கி மக்களின் கதாநாயகன்.

குணேவின் மூன்று படங்கள்தான் மேற்குலகுக்கு பரவலாகக் காணக் கிடைத்த படங்கள். மற்றவை பார்க்கக் கிடைப்பது மிகமிக அரிது. குணே பற்றிய மேற்கத்தியர்களின் பார்வையும் இந்த மூன்று படங்களில் அடிப்படை கொள்கிறது.

குணேவின் படைப்புகளில் பல்வேறு பார்வையுடையோர் பல்வேறு தனித்தன்மைகளைக் காண்கிறார்கள்.

பிரபஞ்சமயமான குறியீட்டுத்தன்மை, யதார்த்தை மறுபடைப்புச் செய்யும் அவர் பாணி, அரசியலின் சாராம்சத்தை மனித உறவுகளுக்கிடையில் வெளியிடும் நுட்பத்தன்மை, இயற்கைக்குள் முகிழ்த்த மனிதர்கள் என இவ்வாறு அற்புதமான கலாசிருஷ்டிக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் இவர் படங்களில் தரிசிக்கிறார்கள்.

கிராமியம் சார்ந்த சூழலில் வடிவமைக்கப்பட்ட சித்தாந்தம் அவரது இளமைக்கால உலகநோக்கு. தனது பள்ளி நாட்களிலேயே ஒரு சிறுகதை எழுதியதற்காக ராணுவத்தினால் கைது செய்யப்பட்டார். ஆரம்ப காலத்தில் தான் சந்தித்த கம்யூனிஸ்டுகள் அனைவருமே தனக்கு ஏமாற்றத்தையே தந்தார்கள் என்கிறார் குணே. தனது திரைப்படங்கள் உலகத்திரைப்பட விழாக்களில் பரிசுபெற்ற ஏற்பு விழாக்களில் தன்னை அவர் எப்போதுமே ஒரு கம்யூனிஸ்ட்டு என்றும் மார்க்ஸிய லெனினியவாதி என்றும் அடையாளம் காட்டிக்கொண்டார்.

மாவோவின் மறைவுக்குப் பின் கலாச்சாரப் புரட்சி தொடர்பாக மாவோ மீது வீசப்பட்ட அவதூறுகளை எதிர்த்து விவாதித்தார் குணே. சிறையிலிருந்த காலங்களிற்தான் தன் வாழ்க்கைப் பார்வை முழுமையாக வடிவமைக்கப்பட்டது என்கிறார். மார்க்ஸ், லெனின், மாவோ போன்றவர்களின் புத்தகங்களை அவர் சிறை வாழ்வில்தான் படித்தார்.

தான் நடித்த எல்லா படங்களும் ஜனநாயக ரீதியானதோ புரட்சிகரமானது என்றோ அவர் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ஆயினும் எல்லாப் படங்களும் வெகுஜன தளத்தை எட்டிய பிரபலமான படங்கள் என்கிறார்.

எப்போதும் குறிப்பிட்ட உயர்ந்த தர ரசிகர்களுக்காகப் படம் எடுப்பதை அவர் மறுதலித்தார். எவ்வளவுதான் உயர்மட்ட ரசனை கொண்டிருந்தாலும் அந்தச் சிறுபான்மையும் தங்களளவில் வெவ்வேறு உலகப் பார்வைகளைக் கொண்டவர்கள்தான் என்கிறார்.

1968 துவங்கி 1970 வரை ராணுவ சேவையில் இருந்தார்

"எனக்குக் குளிருகிறது. பாரிஸ் கம்யூன் தோழர்களின் போர்வையை எனக்குப் போர்த்துங்கள்".



**கலை அதனளவில் புரட்சி செய்யாது. ஆனால் சரியான அரசியல் நிலைபாடுள்ள கலைஞன், உலகு பற்றி சரியான அரசியல் நிலைபாடுள்ள கலைஞன் தனது படைப்பு மூலம் பரந்துபட்ட பலமான உறவை மக்களோடு கொள்ள முடியும். அந்தக் கண்ணி, அரசியல் தன்மை வாய்ந்ததாகலாம். அந்த அர்த்தத்தில் அரசியல் பிரச்சாரத்துக்கு அரசியல் எழுச்சிக்கு கலை உபயோகமாகும், ஆனால் அதன் வறட்டு அர்த்தத்தில் பிரச்சாரத்திலும் போராட்டத்துக்கும் பயன்படவேண்டுவது கலை என்று சொல்வதை நான் மறுதலிக்கிறேன், என்கிறார் குணே.**

குணே. அப்போதும் அவர் மார்க்ஸிய நூல்களைப் படித்துக் கொண்டுதான் இருந்தார். 1970 ராணுவ சேவையின் முடிவில் அவரது முதல் படத்தை 'நம்பிக்கை' (The Hope) எனும் சினிமாவைத் தயாரித்தார். ஒரு தயாரிப்பாளராக அந்தப் படத்தைத் தயாரிப்பதற்காக அவர் கேங்ஸ்டர் படங்களில் நடித்து பணம் ஈட்டினார்.

அக்காலகட்டத்தில் அவர் பல்வேறு அரசியல் குழுக்களோடு தொடர்பு கொண்டார். மாணவர் எழுச்சிகளில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களில் கலந்து கொண்டார். சோவியத் நாடு ஒரு சோசலிச நாடு அல்ல எனும் நிலைபாட்டுக்கு வந்திருந்தார்.

'நண்பன்' (The Friend) எனும் ஒரே ஒரு படத்தை தயாரித்திருந்த அக்கால கட்டத்தில் மறுபடியும் அவர் 1974 முதல் 1981 வரை சிறையிலடைக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் திரைப்பட கருத்துருவம் பற்றி இறுதியான புரிதலுக்கு வந்திருந்தார். சிறையில் நாவல்களும் சிறுகதைகளும் எழுதிக்கொண்டிருந்தார். ஐந்து முறை திரைப்படங்கள் எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இருமுறை தோல்வியில் முடிந்த அவர் முயற்சி பிற மூன்று முறை வெற்றிபெற்றது. அந்த மூன்று படங்கள் தான் அவர் இறுதிப்படங்களான The Herd, Yol மற்றும் The Wall போன்றவை.

சிறையில் இவரோடு இருந்தவரும் 1974 – 1981 கால கட்டங்களில் இவரது படைப்புக்களை நாவல், சிறுகதை, திரைப்படங்கள் போன்றவற்றை வெளியுலகுக் கொண்டு வந்தவருமான நிஹாத் பஹ்ரம் எனும் சக துருக்கிய எழுத்தாளர் தனது நினைவுகளில் குணே பற்றி இன்னும் சில தகவல்களைத் தருகிறார்.

புரட்சிகர கலை வடிவங்களை உருவாக்கவேண்டும் என்பவர்க்கு ஆதர்ஷமாக இருந்தார் குணே. கம்யூனிஸ்ட் என்று ஒரு வார்த்தை சொன்னாலே சட்டவிரோதம், ஏழு ஆண்டு சிறைவாசம் என்றொரு சூழல் துருக்கியில் அன்றிருந்தது. அந்தச் சூழலில்தான் 'நான் ஒரு கம்யூனிஸ்ட், ஒரு மார்க்ஸிட் லெனினிஸ்ட்' என்றொரு கட்டுரை எழுதினார் குணே. அக் கட்டுரைக்காக ஏழு ஆண்டு சிறைவாசம் (1974–1981) புகுந்தார் குணே.

சிறை அனுபவத்திற்குப் பின்னால் திரைப்படத் தொழிலாளியாக சினிமாவுக்குள் நுழைந்தார் குணே. ஒரு சினிமா கொட்டகையிலிருந்து பிறிதொரு கொட்டகைக்கு திரைப்படச் சுருள்களை எடுத்துக் கொண்டு திரிந்தார். 'மிக அழகான பூச்சுடன் படைக்கப்பட்ட திரை மாந்தார்களுக்கிடையில் சாதாரண பொதுஜன முகத்துடன்' குணே இருந்தார். ஏனெனில் சாதாரண மக்களில் ஒருவனாகத்தான் அவர் இருந்தார். 1960 தொடங்கி 5 ஆண்டுகளில் 100 சாகசப்படங்களில் அவர் நடித்திருந்தார். மிகமிகப் பிரபலமான நாடறிந்த நடிகராக அவர் வெற்றி பெற்றார்.

இரண்டாவது காலகட்டத்தில் 'பூமியின் மணமகள்' (Bride of Earth 1968), 'பசித்த நரிகள்' (Hungry Wolves), 'நம்பிக்கை' (The Hope) போன்ற படங்கள் அக்கால கட்டத்தவை (1968–1970). இக்கால கட்ட படங்கள்தான் துருக்கிய கலை வரலாற்றில் சோசலிச யதார்த்தத்தின் துவக்கப்புள்ளி என்கிறார் பஹ்ரம்.

இந்தப் படத்தில் கதாநாயகன், இதுவரை வெற்றியாளனாக இருந்த கதாநாயகன் (குணே) நையப்புடைக்கப்படுகின்றான். தனது நம்பிக்கைகள் அனைத்தும் பொடிப்பொடியாக, பைத்தியக்காரன் மாதிரி அலைகிறான். எலியா காஸன் இந்த படத்தை முதன் முதல் பார்த்தபோது 'மிகச் சக்தி வாய்ந்த சினிமா இயக்குனர் இதோ' என்றார். உடனடியாக இது மத விரோதமான துருக்கிய எதிர்ப்புப் படமென துருக்கியில் தடை செய்யப்பட்டது. 'நம்பிக்கை' படம் வெனிஸ் திரைப்பட விழாவுக்கு கடத்தப்பட்டு திரையிடப்பட்டு பரிசுபெற்றது. குணே மீது இதற்காக வழக்குத் தொடுக்கப்பட்டது.

குணே 'குணே பிலிம்ஸ்' எனும் தனது சொந்த திரைப்பட நிறுவனத்தை இப்போது தொடங்கினார். 20–30 திரைக்கதை வசனங்கள் எழுதினார். அனைத்தும் புத்தகங்களாகப் பதிக்கப் பெற்றது.

இக்காலகட்டத்தில் 1968– அமெரிக்காவில் வியட்நாமிய தலையீட்டுக்கெதிரான மக்கள் எழுச்சி, பிரான்ஸில் மாணவர் எழுச்சி, 'சேகுவேரா – மாவோ' படம் ஏந்திய ஐரோப்பிய இளைஞர் எழுச்சி போன்றன அலையடித்தன.

1971 ராணுவக் கலகத்தில் இடதுசாரி அமைப்புகள் தடைசெய்யப்பட்டன. மக்கள் தெருக்களில் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். இக்கால கட்டத்தில் ராணுவத்துக்கெதிரான இளைஞர் கலகத்தோடு சேர்ந்து நின்றார் குணே. இளைஞர்களுக்கு அடைக்கலம் அளித்தார். அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அடைக்கலம் அளித்ததற்காக குணே கைது செய்யப்பட்டு இரண்டரை ஆண்டுகள் மறுபடி சிறையிலடைக்கப்பட்டார்.

இக்காலகட்டத்தில் 'சிறையின் பெயரால்' (name of the prison) என்றொரு புத்தகம் எழுதினார் குணே. தனது நடவடிக்கைகள் அனைத்தும் நியாயமானவை. நான் புரட்சிகர இயக்கத்தின் ஒரு அங்கம். துருக்கியில் நடக்கும் மக்கள் போராட்டத்தில் ஒரு அங்கம் நான் என்று எழுதினார் குணே.

1974இல் எக்விட் ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார் குணே. அவரோடு சிறைத்தோழர் பஃர்ரமும் விடுவிக்கப்பட்டார். அதன்பின் 45 நாட்கள் தான் சிறைக்கு வெளியிலிருந்தார் குணே. இந்நாட்களில் நகர வாழ்க்கை பற்றிய 'நண்பன்' (The Friend), பருத்தித் தோட்ட தொழிலாளர் வாழ்வுபற்றிய 'ஆவல்' (The Anxiety) என்ற இரு படங்களுக்கான படப்பிடிப்பு நடைபெற்றது. இப்படப்பிடிப்பின்போது ஒரு மதுவிடுதியில் ஏற்பட்ட தகராறில் ஒரு நீதிபதி கொல்லப்பட்டார். குணே கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் அவரைக் கொல்லவும் முயற்சி நடந்தது.

இந்த ஆண்டில் 'எமக்கு ஒரு அடுப்பு, ஜன்னல், மற்றும் பிராட்டி வேண்டும்' என்னொரு நாவல் எழுதினார் குணே. இந்நாவலின் இறுதி 50 பக்கங்களில் சோவியத் சமூக அமைப்பை கடுமையாக விமர்சித்தார் குணே.

இந்த நாட்களில் பஃர்ரம் இல்மஸ் குணேவை அடிக்கடி சிறையில் சந்தித்தார். அதன் விளைவாக 'குணே' எனும் கலாச்சார மாத இதழ் வெளிவரத்துவங்கியது.

18 இதழ்கள் வெளிவந்த பின், வெளிவந்த ஒவ்வொரு இதழும் ராணுவத்தினால் தடை செய்யப்பட்டது. அதன்பின் பஃர்ரம் குணேவின் சினிமா நிறுவனப்பொறுப்பை ஏற்றார். இதன் விளைவாகவே அவரின் இறுதி மூன்று படங்கள் வெளியுலகை எட்டின.

இப்படங்களின் திரைக்கதையை சிறையிலிருந்தபடி குணே எழுதினார். பஃர்ரம் வெளியில் மக்களைச் சந்தித்து நேர்முகங்கள் எடுத்து குணேவுக்குக் கொடுக்க, அதை ஆதாரமாக வைத்து உருவானது திரைக்கதைகள்.

1980இல் 'குணே' பத்திரிக்கை ராணுவத்தால் மூடப்பட்டது. 1980இல் பஃர்ரம் துருக்கியிலிருந்து வெளியேறினார். பிற்பாடு குணே துருக்கியிலிருந்து தப்பி பிரான்சுக்கு வந்த சேர்ந்தார்.

சர்வதேச திரைப்பட விருதுகளை ஏற்கும்போது தனது 'முஷ்டியை இறுக்கி கையுயர்த்தி' கம்யூனிஸ்ட் மனிதக் குறியீட்டை வெளிப்படுத்தினார் குணே.

இவரது அரசியல் நிலைப்பாட்டையும் கலை பிரக்ஞையையும் மதிப்பீடு செய்யும் துருக்கிய மார்க்ஸிஸிட் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 'ஏடி' (A.D) என்பவர் குணேவின் நிலைபாடு மத்திய தரவர்க்க புரட்சிகர ஜனநாயக நிலைபாடு என்கிறார். சில மார்க்ஸிய லெனினிய நிலைப்பாடுகளை குணே கொண்டிருந்தாலும், தனது மத்திய தரவர்க்க நிலைப்பாட்டிலிருந்து துருக்கிய சமூகத்தின் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ளத் தவறினார் குணே என்கிறார். அதன் பிரபஞ்சமயமான உண்மையையும் கிரகிக்கத் தவறினார் என்கிறார்.

சித்தாந்த ரீதியில் அரசியல் ரீதியல் அமைப்பு ரீதியில் இவர் தனது படைப்புக்களை ஒருங்கிணைக் கவில்லை என்றும் குறிப்பிடுகிறார். துருக்கியில் நிலவிய அகபுற தன்மைகளை கம்யூனிஸ்ட் இயக்கம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவேதான் குணே கம்யூனிஸ்ட் இயக்கத்தை முற்றிலும் தழுவிக் கொள்ளவில்லை என்று விளக்குகிறார் இவர்.

குணே அரசியல் பற்றியும் கலைவெளியீடு பற்றியும் தெளிவான நிலைபாடுகளைக் கொண்டிருந்தார். அதுதான் அவரை ஒரு வறட்டுத்தனமான பிரச்சாரக்காரராக இல்லாமல் கலைஞனாக ஆக்கியிருக்கிறது.

'பாதை', 'மதில்', 'ஆட்டியன்' படங்களில், யதார்த்தம் பற்றிய கேள்விகளுக்கு அவர் பல்வேறு சந்தர்பங்களில் பதிலளிக்கிறார்.

இம்மூன்று படங்களில், ஆக்கபூர்வமான அரசியல் விமர்சனம் தெளிவாக இருக்கிறதா எனும் கேள்வி. வாழ்க்கை இருக்கிறவாறு அவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது, பெண்கள் மீதான அடக்குமுறை விமர்சனமற்று உள்ளபடி சொல்லப்பட்டிருக்கிறது எனும் விமர்சனம். துயரத்தையும் விரக்தியையும் அவநம்பிக்கையையும் வெளியிடுகிறது எனும் குற்றச்சாட்டு. படங்கள் முழுக்க எதிர்மறையாக முன்வைக்கப்படுகிறது எனும் வாதம்.

இவைகளுக்குத் தெளிவாக பதிலிறுத்தார் குணே.

இதுதான் வாழ்வுக்கும் கலைக்குமான உறவு பற்றிய முழுமையான பார்வை என்று நான் கருதுகிறேன்.

அவர் சொல்கிறார்: "முரண்பாடு ஒவ்வொரு நிகழ்விலும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதுதான் முரண்பாடுகளின் இணைவு என்று நாம் புரிகிறோம். மனிதனும் வாழ்வும் இத்தகையதுதான்.

'பாதை' படத்தில் வருகிற 'ஸயத்' பாத்திரத்தை எடுத்துக்கொள்வோம். அவன் தன் மனைவியைப் பனியில் சாகவிடுகிறான். இறுதி நேரத்தில் காப்பாற்றவும் ஓடுகிறான். காப்பாற்ற வேண்டும் எனும் உள்விருப்பம் அவனுக்கு இருக்கிறது. அவள் இறந்த பின்னால் அதற்காக மிகவும் துயரமுறுகிறான். அவனுக்குள் உறுத்தல் இருக்கிறது. அவனுக்குள் இருக்கும் அந்த 'உறுத்தல்' ஒரு தனிநபராக அவனைச் சீரழிக்கிறது. அவன் ஆன்மாவை உடைக்கிறது. இதுதான் எனக்கு மிகவும் ஆக்கபூர்வமானது.

**கலைப்படைப்புக்குள் அரசியல் போராட்டத்தின் அனைத்துக் கூறுகளையும், அனைத்து இலட்சியங்களையும் தேடிக் கொண்டிருப்பது சரியல்ல. கலைப்படைப்பு அரசியல் இயக்கத்தை எளிமையானதாக்கும். அரசியலின் முழு வேலையையும் கலைப்படைப்பின் மீது ஒருவர் சுமத்த முடியாது.**

அந்தப் பொய்யன், திருடன் 'மொஹமத்'தை எடுத்துக் கொள்வோம். 'தான் கைவிட்டதனால்தான் எனது மைத்துனன் இறந்தான்' என ஒப்புக் கொள்கிறான். இந்த உறுத்தல், இந்த மனிதப் பண்புதான் எனக்கு ஆக்கபூர்வமானது. முக்கியம்!

இந்தக் குர்திஸ் பையனை எடுத்துக்கொள்வோம். அவன் சிறைக்குத் திரும்பிப் போக மறுக்கிறான். சுட்டுக்கொல்லப் பட்ட தமையனைத் தொடர்ந்து தானும் போராடப் போவதாகச் சொல்கிறான். அத்தனை சிரமங்களையும் ஏற்பதாகச் சொல்கிறான்!

என்னளவில் ஆக்கபூர்வமானது



இயக்கத்தை எளிமையானதாக்கும். அரசியலின் முழு வேலையையும் கலைப்படைப்பின் மீது ஒருவர் சுமத்த முடியாது.

கலைப்படைப்பு, சில ஸ்தூலமான அரசியல் நடவடிக்கைகள், எழுத்துக்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் மூலம் நிறைவு செய்யப்பட வேண்டும்.

சில தோழர்கள் என்மீது அரசியல் தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் வைக்கிறார்கள். அந்த விமர்சனங்கள் எனக்கு அவ்வளவு முக்கியமானவை அல்ல.

கலை அதனளவில் புரட்சி செய்யாது. ஆனால் சரியான அரசியல் நிலைபாடுள்ள கலைஞன், உலகு பற்றி சரியான அரசியல் நிலைபாடுள்ள கலைஞன் தனது படைப்பு மூலம் பரந்துபட்ட பலமான உறவை மக்களோடு கொள்ள முடியும். அந்தக் கண்ணி அரசியல் தன்மை வாய்ந்ததாகலாம். அந்த அர்த்தத்தில் அரசியல் பிரச்சாரத்துக்கு அரசியல் எழுச்சிக்கு கலை உபயோகமாகும். ஆனால் அதன் வறட்டு அர்த்தத்தில் பிரச்சாரத்திலும் போராட்டத்துக்கும் பயன்பட வேண்டுவது கலை என்று சொல்வதை நான் மறுதலிக்கிறேன்" என்கிறார் குணே.

குணே மேலும் சொல்கிறார்: "இந்த அர்த்தத்தின்படி

**கலை தனக்கேயுரிய தனிமொழி கொண்டது. கலைக்கே உரிய மொழி அது. முழுமையாக (Totally) முற்று முழுதாக (Absolutely) அந்த மொழியை எவரும் மதிக்க வேண்டும். இதை நீங்கள் மதிக்கவில்லையானால், இந்த மொழியை நீங்கள் மதிக்கவில்லையானால், பிறகு அந்த ஆயுதம் உங்களைக் கொல்லும்படி அது திருப்பித் தாக்கும் வலுக் கொண்டது.**

என்று நான் காட்ட விரும்புவது, வாழ்வு மாறிக் கொண்டிருக்கிறது என்பதைத்தான், மனிதன் மாறிக் கொண்டிருக்கிறான், செழுமைப்படுகிறது, வேறுவிதமாக வளர்கிறது, இயங்குகிறது என்பதைத்தான்."

புரட்சிகர இயக்கத்தில் உங்கள் கலையின் பங்கு என்ன என்பது ஒரு கேள்வி.

"எனது நோக்கம் தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பது. இதற்கு

1. அரசியல்
2. பொருளாதாரம்
3. கருத்துருவ கலாச்சார களம் என்று மூன்று உண்டு.

கலாச்சாரப் போராட்டம் என்பது கருத்துருவப் போராட்டமும்தான், ஒரு வகையில் அரசியல் போராட்டமும்தான். ஆனால் அரசியலின் எல்லாக் கூறுகளையும் அது கொண்டிருக்க வேண்டுமென பாசாங்கு செய்ய முடியாது.

கலையின் பங்களிப்பை அரசியல் போராட்டம் நிறைவு செய்யவேண்டும். கலையின் வீச்சை, அதோடு சேர்ந்த அரசியல் வேலை நிறைவு செய்யவேண்டும்.

கலைப்படைப்புக்குள் அரசியல் போராட்டத்தின் அனைத்துக் கூறுகளையும், அனைத்து இலட்சியங்களையும் தேடிக் கொண்டிருப்பது சரியல்ல. கலைப்படைப்பு அரசியல் புரட்சிகரமான கலையை நீங்கள் கொண்டிருக்கும் போது நீங்கள் மக்களை மட்டும் ஆகர்ஷிப்பதில்லை, பிற கலைஞர்களையும் ஆகர்ஷிக்கிறீர்கள். அரசியல் பிரக்ஞைக்கு களத்தை நீங்கள் தயார் செய்கிறீர்கள். இந்த அர்த்தத்தில் கலை ஒரு ஆயுதம், ஒரு படைக்கலம் போன்றது,

ஆனால் கலை தனக்கேயுரிய தனிமொழி கொண்டது. கலைக்கே உரிய மொழி அது. முழுமையாக (Totally) முற்று முழுதாக (Absolutely) அந்த மொழியை எவரும் மதிக்க வேண்டும். இதை நீங்கள் மதிக்கவில்லையானால், இந்த மொழியை, நீங்கள் மதிக்கவில்லையானால், பிறகு அந்த ஆயுதம் உங்களைக் கொல்லும்படி அது திருப்பித் தாக்கும் வலு கொண்டது."

1984ஆம் ஆண்டு செப்டம்பர் 9, துருக்கி அரசியல் அகதியாக பாரிஸில் கான்ஸர் நோயினால் மரணமுறும் விநாடியில் குணேயின் இறுதி வார்த்தைகள் இவைதான்:

"எனக்குக் குளிருகிறது. பாரிஸ் கம்யூன் தோழர்களின் போர்வையை எனக்குப் போர்த்துங்கள்".

அவர் விருப்பப்படியே பாரிஸ் கம்யூன் தோழர்களின் கல்லறைக்கு அருகில் அவரின் உடல் அடக்கம் செய்யப் பட்டது.

அவன் நிரந்தர மனிதன். □

# பிரித்தானியாவின் பரிசு 2

சிவா. வித்தியாதரன்

கண்ணன் நேரத்திற்கே கோயிலடிக்கு வந்து விட்டான். சனம் அதிகம் இல்லை. ஈழத்துக் கோயில்களில் எப்போதுமே அதிக சனங்களைக் காண்பது கடினம். சில சமயம் விசேட தினங்களிற் சுவாமி தூக்க யாருமே இருக்க மாட்டார்கள். மோட்டார் பொருத்திய சிறிய வண்டியொன்றில் வைத்து உள்வீதி வருவது பல கோயில்களில் வழமையாகிவிட்டது. பூசை நேரம் தவிர்ந்த நேரங்களிற் கோயில் பூட்டப்பட்டே இருக்கும். பூசகர்கள் அந்தந்த நேரத்துக்கு வந்து பூசையைச் செய்து போய்விடுவார்கள். எனவே கண்ணன் தனியே தன் பாட்டில் பிரித்தானியக் கோயில்களுடன் வளாகக் கோயிலை ஒப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"எங்களுடைய ஆங்கிலேயச் சைவர்கள் எவ்வளவு சிவபக்தியுடையவர்கள். இங்கே உள்ளவர்களுக்கு ஒரு விதமான சிவசிந்தனையுமே கிடையாது. அங்கே வெள்ளி, பூரணை, திருவிழா என்றால் கோயில் நிரம்பி வழியும். அதனால் வயது போனவர்கள் சிலர் மற்ற நாட்களிலேதான் ஆறுதலாகப் போய்க் கும்பிட்டு வருவார்கள். பூசகர்கள் எவ்வளவு பக்தி சிரத்தையுடன் பூசை செய்வார்கள். தேவாரங்கள் என்ன, மங்கல வாத்தியங்கள் என்ன, கோயிலின் சூழல் என்ன, எல்லாமே மனதைச் சொக்க வைத்து மெய்மறக்கச் செய்துவிடும். இங்கே என்றால் அரசாங்க அலுவலகம் மாதிரிக் கடமைக்குக் கோயில் நடக்கிறது. சைவசித்தாந்தம், தமிழர்கள் உலகத்துக்குத் தந்த ஒன்றாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு அதை முறையாகக் கடைப்பிடிக்கிறவர்கள் நாங்கள் தான்".

கண்ணன் இதைப்பற்றி மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொண்டாலும் அதிற் கொஞ்சம் உறுத்தல் இருந்தது உண்மை. கண்ணனுடைய மனதின் இடப்பெயர்ச்சியை இடைமறித்து அவனை மறுபடி வளாகக் கோயிலடிக்குக் கொண்டு வந்தது ஒரு மின்சார மோட்டார் வாகனத்தின் கதவு திறந்து மூடிய ஓசை. பெருஞ்சித்தனாருடைய வாகனமோ என்று நினைத்துத் திரும்பிப் பார்த்தான். அது கோயிலுக்குப் பண்டங்களைக் கொண்டு வருகிற வண்டி. சாரதியும் கோயிற் பணியாள் ஒருவருமாக வாகனத்தின் பின் கதவை உயர்த்தித் திறந்து உள்ளிருந்து பால் நிரம்பிய பிளாஸ்ற்றிக் குடுவைகள், காகிதப் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்ட பிரசாதப் பொட்டணங்கள், சந்தன, குங்கும, திருநீற்றுச் சரைகள் எல்லாவற்றையும் இறக்கினார்கள். கோயிற் கதவைத் திறந்து உள்ளே போன பணியாள் ஒரு தள்ளுவண்டியைக் கொண்டுவந்தார். எல்லாவற்றையும் தள்ளுவண்டியில் ஏற்றிய பணியாள், சாரதியைப் பார்த்துப் "பூ" என்றார். "மறந்தே விட்டேன்" என்று சொன்னபடி சாரதி பொலித்தீன் பைக்குள் அடைக்கப்பட்ட பூக்கள் நிரம்பிய சிறிய கூடையை எடுத்துக் கொடுத்தார். கண்ணனுக்கு வந்த புதிதில் இதெல்லாம் கொஞ்சம் வினோதமாக இருந்தது. ஆனாலும் எல்லாம் பார்த்துப் பழகி விட்டது. இதைப்பற்றித் தன்னுடைய கடிதங்களிற் குறிப்பிட்டு எழுதியதை அவனுடைய அம்மா முதலில் நம்பவேயில்லை. தமிழர்களுடைய அலாதியான நகைச்சுவை உணர்வு மகனையும் தொற்றிக் கொண்டது என்று தான் நினைத்தார். "காகிதப் பூக்களாற் தான் பூசை செய்கிறார்கள் என்று அடுத்த முறை எழுதுவாயாக்கும்" என்று அம்மா எழுதியது கண்ணனுடைய நினைவுக்கு வந்தது. அதுவும் சாத்தியமானது தான் என்ற எண்ணம் மனதிற் தோற்றியது.

பின்னேரப் பூசைக்காகக் கோயில் வாசல் திறந்தது. கண்ணன் பெருஞ்சித்தனார் வருகிறாரா என்று திரும்பிப் பார்த்தபடியே கோயிலுக்குட் போனான். ஒருவேளை சரியாகப் பூசை நேரத்திற்கு வருவார் என்று நினைத்துக் கொண்டான். அம்மா செய்யச் சொன்ன அரிச்சனை ஞாபகம் வந்தது. அரிச்சனைச் சீட்டு வாங்கும் இடத்துக்குப் போனான். அவனுக்கு முன்னால் ஒருவர் மட்டுமே நின்றார். அவர் போனதும் அலுவலரை நோக்கி "ஒரு அரிச்சனைச் சீட்டுத் தருகிறீர்களா?" என்று கேட்டான். முகத்தில் ஒருவிதமான பாவனையும் இல்லாமல் இயந்திரத் தொனியில் அவர் அவனிடம் பேசினார்.

"வணக்கம்."

"வணக்கம்."

"மலிவு அரிச்சனை, சாதாரண அரிச்சனை? விசேட அரிச்சனை? அதிவிசேட அரிச்சனை?"

"சாதாரண... இல்லை, இல்லை, விசேட அரிச்சனை."

"பேர்?"

"கீர்த்தி இசுப்பெஞ்சர் சிமித்து".

"தமிழ்ப்பேர்?"

"கண்ணன்."

"நட்சத்திரம்?"

"உரோகிணி."

"எட்டுக்காசு. எப்படித் தரப் போகிறீர்?"

(இந்த இடத்தில் நான் இன்னொரு முறை குறுக்கிட வேண்டி இருக்கிறது. தமிழர் பேரரசின் நாணய முறையில் ஒரு பணத்துக்குப் பத்துக் காசு. ஒரு காசுக்குப் பத்துச் சல்லி. அரைச்சல்லி ஐந்திலொரு சல்லி பத்திலொரு சல்லிக்கெல்லாம் நைலோனில் செம்பு இழை பதித்த நாணயங்கள் உண்டு. சல்லிகள், காசுகள் உலோகத்தாலானவை. பணம் மட்டும் கசங்காத விசேட செயற்கை நார்க் காகிதத்திற் செய்யப்பட்டிருந்தது. தமிழர் பேரரசு நிறுவப்பட்ட காலத்திலிருந்து தமிழர் பணத்தின் பெறுமதி துரிதமாக அதிகரித்து வந்தது. மூன்று காசுக்கு நல்ல மரக்கறிச் சாப்பாடு எடுக்கலாம். ஒரு இலீற்றர் குடுவை பனஞ் சாராயத்துக்கு ஒரு பணமும் ஐந்து காசும் வரும். நல்ல விசுக்கி, அதாவது ஸ்கொச் விஸ்கி, ஏழு காசுக்குக் கிடைக்கும்.)

காசின் பெறுமானத்தை பிரித்தானிய மாற்குவுக்கு (மார்க்) மாற்றிப் பார்த்தான். ஐநூறு மாற்கு மட்டில் வந்தது. பெரிய தொகை தான். ஆனாலும் தமிழரசில் அது அற்பத் தொகை என்று தான் சொல்வார்கள். அவனது சிந்தனையோட்டத்திற் குறுக்கிட்டது அலுவலரது உணர்ச்சியற்ற குரல். கேள்வி விளங்கவில்லை என்று நினைத்தார் போல. "எட்டுக் காசு.

நாணயமாகத் தருகிறீரா அல்லது கடன் வங்கி வில்லையா?"

"நாணயம் தான்" என்று சொன்னபடி காசுக் குற்றிகளை எண்ணி மேசையில் வைத்தான். அரிச்சனைச் சீட்டு கொம்பியூட்டரில் அடிக்கப்பட்டு வந்தது.

"உள் மண்டபத்துக்கு முன்னாலுள்ள இயந்திரத்தில் வையும். பூசை முடிந்தவுடன் திருநீறு பிரசாதத்தை வந்து வெளிவாசலுக்கு அருகில் உள்ள யன்னலிற் பெற்றுக் கொள்ளலாம். கண்ணன் அரிச்சனைச் சீட்டை எடுத்துக் கொண்டு போய் இயந்திரத்திற் செருகி விட்டுத் திரும்பி வந்து கொடித்தம்பத்திற்கு அருகாக நின்றான். சற்று நேரத்தில் மூலத்தானக் கதவு திறந்தது. சிவலிங்கத்தைக் குடுவை நீரில் பூசகர் குளிப்பாட்டி நீறு பூசினார். பின் பூசை ஆரம்பமானது. மந்திரங்கள் இங்கிலாந்திற் போல இங்கும் தமிழிலேயே சொல்லப்பட்டன. தீப ஆராதனை மட்டும் பற்றரியில் இயங்கும் மின் விளக்குக்களால் செய்யப்பட்டது. எப்படியோ அதற்குள் கற்பூர வாசனையையும் வரவழைத்து விட்டார்கள். மரபுக்கும் நவீன தொழில் நுட்பத்திற்கும் பாலம் அமைப்பதில் தமிழர்கட்கு நிகர் தமிழர்களே தான் என்று நினைத்தாலும் பிரித்தானியக் கோயில்களின் எரியும் தேங்காய் எண்ணெய் மணமும் மங்கலான ஒளியும் கற்பூரப் புகையும் போல ஒருநாளும் வராது என்று மனதிற்குள் உறுதிப்படுத்திக் கொண்டான்.

பூசை முடிந்த பின்பு கண்ணன் என்ற பேர் உள்மண்டபத்தக்கு முன்னாலிருந்த அரிச்சனைச் சீட்டு இயந்திரத்திற்கு உயரே இருந்த வீடியோ திரையிற் தோன்றியது. அவனுடைய அரிச்சனை நடந்து முடிந்த பிறகு வேறொரு பேர் வந்தது. கோயிலை ஒருமுறை உள்வீதி சுற்றிக் கும்பிட்டு விட்டு வெளி வாசலடியில் இருந்த யன்னலில் தன் பேர் அச்சிடப்பட்டிருந்த, பிரசாதப் பொதியை வாங்கிக்கொண்டான். "கோயிலின் உள்ளேயோ சூழலிலேயோ உணவோ பானமோ உட்கொள்ளலாகாது. மீறினாற் தண்டம் ஐந்து பணம். தயவுசெய்து பிரசாதத்தைக் கோயில் மடத்திலோ உங்கள் வதிவிடத்திலோ நுகரவும்." என்ற எச்சரிக்கை வாசகங்கள் பிரசாதப் பொதியிற் பிரகாசமான சிவந்த எழுத்திற் பொறிக்கப்பட்டிருந்தன. பொதியிலிருந்து திருநீற்றை மட்டுங் கவனமாக எடுத்துப் பூசிக் கொண்டான். பேராசிரியர் பெருஞ்சித்தனாருடைய நினைவு வந்தது.

"நம் ஆங்கிலேயர்கள் போலல்லாமற் தமிழர்கள் சொன்ன நேரம் தவற மாட்டார்களே. பேராசிரியருக்கு ஏதாவது எதிர்பாராத விடயம் நடந்திருக்குமோ? அல்லது என்னைக் காண அவசியமில்லை என்று விட்டுவிட்டாரோ?" இவ்வாறு அவன் மனத்துடன் சேர்ந்து கண்களும் அங்குமிங்குமாக அலையக் கோயில் வாசலில் நின்றவனது தோளில் யாரோ தட்டினார்கள். மூர்த்தி (ஆங்கிலப் பேர் மோ..பி) அங்கே நின்றான். மூர்த்தி, கண்ணனுடைய நண்பன். தூரத்து உறவு என்றும் சொல்லலாம். பல்தேசிய மின்னுபகரண நுண்தொழில் உற்பத்தி நிறுவனத்தின் பன்னாட்டுப் பிரிவிற் சந்தைத்துறை ஆய்வாளனாக வேலை பார்க்கிறான். திறமைசாலி. ஆனாலும் பிரித்தானியாவில் வேலை வாய்ப்பில்லாததால் நாட்டை விட்டு வெளியேறி ஈழத்துக்கு வந்தவன். அவனது தகுதிக்கு அவன் அவனது பிரிவிற்குத் தலைவனாக இருக்க வேண்டும் என்று ஊரிற் சொல்வார்கள். தமிழர்கள் என்றுமே அயலவர்களது தகுதிக்கேற்ற பதவிகளைக் கொடுப்பதில்லை, எதற்கும் வசதியாக ஏதாவது நியாயம் காட்டுவதில் வல்லவர்கள் என்று எப்போதோ ஒளவைப்பாட்டி கண்ணனுக்கு எச்சரித்திருந்தார். மூர்த்தி இதுபோல விஷயங்களைப் பொருட்படுத்துகிற ஆளில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'திரைகடலோடியும் திரவியந் தேடு' என்ற தமிழ்ப் பொன்மொழிகளைத் தமிழரை விட நன்றாக அனுட்டிப்பவன்.

> தமிழர் பேரரசின் நாணய முறையில் ஒரு பணத்துக்குப் பத்துக் காசு. ஒரு காசுக்குப் பத்துச் சல்லி. அரைச்சல்லி ஐந்திலொரு சல்லி பத்திலொரு சல்லிக்கெல்லாம் நைலோனில் செம்பு இழை பதித்த நாணயங்கள் உண்டு. சல்லிகள், காசுகள் உலோகத்தாலானவை. பணம் மட்டும் கசங்காத விசேட செயற்கை நார்க்காகிதத்திற் செய்யப் பட்டிருந்தது. தமிழர் பேரரசு நிறுவப்பட்ட காலத்திலிருந்து தமிழர் பணத்தின் பெறுமதி துரிதமாக அதிகரித்து வந்தது.

"நேற்றைய லண்டன் முரசொலியும் போனவார ஆங்கில நாதமும் பார்க்க விருப்பமா?"

"வைத்திருக்கிறீர்களா?"

"இந்தா பாரும்" என்று இரண்டு லேசர் தட்டுக்களை நீட்டினான் மூர்த்தி.

"அடுத்த கிழமை தான் திருப்பித் தர வசதிப்படும்." என்றபடி கையை நீட்டினான் கண்ணன்.

"நான் பார்த்து விட்டேன். எப்போது தந்தாலும் சரி. வாருமேன், எங்கேயாவது போய்ச் சாப்பிடுவோம்."

"இன்றைக்கு இயலாது. ஒருவரைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. அடுத்த கிழமை வருவீர்களா?"

"சிலவேளை நடுவிலும் வருவேன். அப்போது காண்போம்." மூர்த்தி நகர்ந்தான். கண்ணனுடைய கண்கள் மறுபடி வீதியை நோக்கின. அதோ, பெருஞ்சித்தனார் வீதியைக் கடந்து வந்து கொண்டிருந்தார். கண்ணனுக்குப் பின்னாற் கோயிற் கதவு மூடப்பட்டுக் கொண்டிருந்தது. இப்போது தான், பூசை முடியச் சந்திப்பதாகப் பெருஞ்சித்தனார் சொன்னது கண்ணனின் நினைவுக்கு வந்தது. "திருத்தமாகச் சிந்திக்கவும் செயற்படவும் நமக்குத் தெரியாததாற் தான் தமிழர்கள் நம்மை ஆள முடிகிறது." என்று பெருமூச்சு விட்டபடி பெருஞ்சித்தனாரை நோக்கி நடந்தான்.

பெருஞ்சித்தனாரும் கண்ணனும் மடத்தை நோக்கி நடப்பதை இரண்டு சோடி கண்கள் வெவ்வேறு திசைகளினின்று பார்த்தன. (இன்னும் வரும்)

# முறிந்த பனை

**இரண்டாவது முன்னுரை**
**பெப்ரவரி 1990**

மூலக் கையெழுத்துப் பிரதி தயாராகி இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. இக்காலப்பகுதியிலே இந்நூலின் ஆசிரியர்களுள் ஒருவரான கலாநிதி ராஜினி திரணகமவின் படுகொலையுட்பட பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவை இரண்டாவது முகவுரையின் அவசியத்தை எமக்குணர்த்தின. 1987 ஒக்ரோபர் போரின் உக்கிரமான காலத்திலும், அதைத் தொடர்ந்த காலத்திலும், ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்கு முன்னர் என்ன எழுதினோம் என மீட்டுப்பார்க்க ஆசிரியர்களுக்கு கால அவகாசமும் கிடைத்தது. இந்த நிகழ்வுகளின் உணர்ச்சிமயமான தாக்கத்தைப் பேணும் அதேவேளை கட்டுரைகளில் அதிக சீர்மையும், புறவயத் தன்மையையும் ஏற்படுத்துவதற்காக பிரசுரத்துக்கு முந்திய பிரதியில் உள்ள விடயங்களில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. முன்னர் எம்மைப் பாதித்தவையாயினும், இப்பொழுது நூலின் பரந்த முக்கியத்துவத்தை மங்கச் செய்யும் அப்பதிவுகளையும் நாம் நீக்கிவிட்டோம். நாம் காலஞ் சென்ற கலாநிதி ராஜினி திரணகம எழுதிய ஒரு கட்டுரையையும் இதில் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளோம். நாம் தனிப்பட்ட முறையில் பிரசுரத்துக்கு முன் பிரதிகளை விநியோகித்த போதும் நாம் திருத்தங்களைச் செய்ய விரும்பிய காரணத்தால் பெருமளவாய் விநியோகிப்பதைத் தாமதப்படுத்தினோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாகச் சில நிகழ்வுகள் பிரசுரத்துக்கு முந்திய பிரதியை பெருமளவில் விநியோகிப்பதற்கு எம்மை நிர்ப்பந்தித்தது. மேலும் விடயங்களைச் சேர்க்க இருக்கையில், சென்ற ஆண்டு செப்டெம்பரில் ராஜினி திரணகம கொல்லப்பட்டார். எனவே சிறு மாற்றங்களுடன் இந்நூலைப் பிரசுரிக்க, நாம் முடிவு செய்தோம். நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல், இனமேலாதிக்கவாத இலங்கை அரசுக்கு எதிராக நடத்தப்பட்டுக் கொண்டிருந்த போரிலே ஒரு இலட்சியத்துடன் சகல தமிழ் மக்களினதும் பெயரால் எண்ணற்ற இளைஞர்கள் தாமாகவே முன்வந்து ஆயுதம் தாங்கினர். தம் உயிர்களைத் தியாகம் செய்தனர். பெரும்பாலும், அவர்கள் தமது இலக்கான தமிழ் ஈழத்தை, ஒரு தனியான அரசை, எதிர்காலத்தில் அடைவதற்காகப் போரிட்டார்கள். போராட்டத்தின் வரலாறு, விரும்பியோ விரும்பாமலோ அதிற் பங்கேற்றவர்கள் பற்றியும் போராட்டத்தின் அநேக கருதுகோள்களையும், கோட்பாடுகளைப் பற்றியும் ஐய வினா எழுப்பும் ஆய்வை இன்று எழுத்துருவில் கொணர்தல் அநேகருக்குப் பொறுப்பற்றதும் மூடத்தனமானதுமாகத் தோன்றலாம். தேசியவாத எழுச்சியின் அறுவடைநாளில் சுய விமர்சனத்தில் ஈடுபடுவது அசகாய சூரத்தனமானதும், தற்கொலைக்கொப்பானதுமென மற்றையோர் கூறலாம்.

**2**

மற்றெல்லாக் காரணங்களையும் விட முக்கியமாக உலகின் அதி நவீன ஆயுதங்களைக் காவிக்கொண்டு எமது வீதிகளிலே வலம் வரும் எமது இளைஞர்களின் நலனுக்காகவே நாம் இந்நூலை எழுத வேண்டியிருந்தது. மேலும், வெறுமனே பாசாங்கு, மனச்சோர்வு, நம்பிக்கையின்மை ஆகியவற்றை மாத்திரமே முன்னைய சந்ததியினரிடமிருந்து பெற்றுள்ள இன்றைய யுவர், யுவதிகளின் நலனுக்காகவும் நாம் இதனை எழுதவேண்டியதாயிற்று. இன்றைய போக்கு, முழு இளைஞர் பரம்பரையினதும் அபிலாசைகளைப் பயன்படுத்தி, ஒருவரோடொருவர் போரிடுகின்ற எதிரிகளாக அவர்களைத் தள்ளிவிட்டு அவர்களது ஆக்க சக்தியை நிர்மூலமாக்கிக் கொண்டிருக்கின்றது.

மேலும், மக்களின் சுயேச்சையான, ஆனால் உண்மையான உணர்வுகளை வெளிக்கொணர்தல் தேவை எனவும் நாம் உணர்ந்துள்ளோம். மக்கள், பொதுவாக நிகழ்ச்சிகளின் தோற்றத்துக்கப்பால் செல்லாது, இயல்பூக்க ரீதியாகவே எதிர்வினைப்படுவர்: அவர்கள் அவற்றை விமர்சனக் கண்கொண்டு நோக்குவதில்லை. எனவே மக்களைக் குவிமையமாகக் கொண்டு சுதந்திரமாகவும், புறவயமாகவும் சிந்திப்பதற்கு ஒரு சூழ்நிலையை அல்லது இடைவெளியைத் தோற்றுவிக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் இதை எழுதுவதற்கு எம்மைத் தூண்டிற்று.

இந்நூலை நாம் எழுதிக் கொண்டிருக்கும்போது, நமது வரலாற்றின் எந்த ஒரு சாதகமானதும், ஆரோக்கியமானதுமான விருத்தியினதும் அடிப்படை பிரதானமாக எம்மிலேயே தங்கியுள்ளது எனும் முடிவு திரும்பத்திரும்ப எம்மனதில் உருவாகியது. ஆகையால், இந்திய அரசு போன்ற வெளிச் சக்திகள் விடுதலைப் போராட்ட காலத்தில் செய்த சகல வெளிப்படையானதும், இரகசியமானதுமான அரசியற் சதி நாச வேலைகளையும் தமது குறுகிய பார்வையால், மக்கள் விடுதலை பற்றிய ஆரம்ப கால இலட்சியத்திலிருந்து விலகிப்போன இந்தியாவின் உள்ளூர் கூட்டாளிகளின் நடைமுறைகளையும் நாம் வன்மையாக கண்டிக்கும் அதே வேளை எமது அபிலாசைகள், கருதுகோள்கள், பலம், பலவீனங்கள் ஆகியவற்றைப் பற்றி தெளிவு பெறுவதற்கான தேவை பற்றி பிரதானமாக நாம் அழுத்திக் கூறுகிறோம். விமர்சனத்தை விரும்பாத, அதிதீவிரமான குறுகிய இலட்சியவாதத்தைக் கொண்டவர்களுக்கு இது பெரும் சவாலாக அமையலாம். எமது விடுதலைப் போராட்டம் எப்பொழுதும் இராணுவத்

தேசியவாத எழுச்சியின் அறுவடை நாளில் சுய விமர்சனத்தில் ஈடுபடுவது அசகாயசூரத்தனமானதும், தற்கொலைக் கொப்பானது என மற்றையோர் கூறலாம். மற்றெல்லாக் காரணங்களையும் விட முக்கியமாக உலகின் அதி நவீன ஆயுதங்களைக் காவிக்கொண்டு எமது வீதிகளிலே வலம் வரும் எமது இளைஞர்களின் நலனுக்காகவே நாம் இந்நூலையெழுத வேண்டியிருந்தது.

தீர்வுகளையே தெரிந்தெடுக்கின்றது. அதனால் விமர்சனம் செய்வோரும், முரண்படுவோரும் கொல்லப்பட்டார்கள். இயக்கத்தை விட்டு விலகியோர் கொல்லப்பட்டுத் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டார்கள். விமர்சனம், 'புனிதமான இயக்கத்தைக் களங்கப்படுத்தும் முயற்சி' எனக் கூறப்பட்டது. இராணுவரீதியாகப் பலம் பெற்ற குழுவுக்கு அரசியல் சிறப்புரிமையாகி விடுகிறது. மேலும், மதிப்பிழந்த சக்திகளின் முன், அக்குழுவின் சரணாகதிகள் கூட ஈழ இலட்சியத்தினை முன்தள்ளத் தேவையானது என விளக்கமளிக்கப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்திலே, ராஜினியின் எழுத்துக்களிலிருந்து மேற்கோள் காட்டுவது சாலப் பொருத்தமானதாகும்.

"எமது சமூகம் முழுமையையும் நம்பிக்கையிழந்து விலகிப்போயிருக்கின்ற ஓர் மனோநிலை கவ்விக் கொண்டுள்ளது. துப்பாக்கிகளின் நீண்ட நிழல்கள், பலத்திற்கும், புகழுக்குமானதாக மட்டுமின்றி, பீதிக்கும், பயங்கரவாதத்திற்கும் மூலமாக உள்ளது. இந்தப் பீதியூட்டுகின்ற நிழலிலே ஒன்றையொன்று குறைநிரப்புகின்ற சக்திகள், ஒன்றினாலொன்றான உந்துதலில் தாண்டவமாடுகின்றன. இத்தகைய இயக்கமற்ற, பாரிசவாதத்தன்மையை உருவாக்கும் அடக்குமுறை, வெளியில் இருந்து திணிக்கப்பட்ட அதிகாரததுவத்தால் உருவானதல்ல. உண்மையில், அது எமது சமூகத்தின் கருவறையிலிருந்து உற்பவித்த ஓர் அழிவுத்தன்மையை மட்டுங் கொண்ட வன்முறையினாலேயே உருவானது."

## ஏன் ராஜினி திரணகம கொலை செய்யப்பட்டார்?

ஏன் ராஜினி திரணகம கொலை செய்யப்பட்டார்? அநாமதேய தந்திரத்தைத் தேர்ந்தெடுத்த கொலையாளிகளால் இக்கேள்விக்குப் பதில் அளிக்கப்படவில்லை. அவரது வாழ்வையும் பணியையும் நினைவுகூர முயற்சிகள் மேற்கொண்டபொழுது உலகத்தில் பரந்துவாழும் தமிழர்களால், "அநேகர் கொல்லப்பட்டு நினைவுகூரப் படாமல் இருக்கின்றபோது அவர் மட்டுமேன் நினைவு கூரப்பட வேண்டும்?" எனக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அவர் கொலை செய்யப் பட்டார். ஏனெனில், அவரைப் பொறுத்தவரை, அவரது பொறுப்புணர்வு, சாதாரண மக்களின் அர்த்தமற்ற மரணங்களுக்குக் காரணமான ஆதிக்க அரசியற் போக்குகள் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டுமென, அவரைத் தூண்டியதேயாகும். உலகத்தின் தலைநகரங்களிலிருந்து, அவ்வப்போது, அக்கணங்களின் வில்லன்களாகத் தாம் கருதுபவர்களை அம்பலப்படுத்த மட்டுமே மரணமடைந்தவர்களின் புள்ளி விபரங்களைப் பயன்படுத்துவது ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையாகும். பிரச்சார நோக்கங்களுக்காக மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்ற உபாயத்துடன் இது நன்கு ஒத்துப்போகின்றது. ராஜினி இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததைச் செய்தார். அவர் கேட்ட கேள்விகள் அழிவின் காரணங்களுக்குள் ஆழமாகச் சென்றன. அவற்றின் பின்னாலுள்ள அரசியல் பற்றியும் அவர் வினா எழுப்பினார். அவர் 'முறிந்த பனையின்' உள்ளடக்கத்தை தனித்தான அறிவியல்சார் சமுகவரலாற்றுப் பகுப்பாய்வாகவன்றி, மக்களின் ஜனநாயகப் பரிகாரமாக நோக்கினார். தங்கள் இலட்சியம் பற்றி ஒன்றுமறியாது ஆயுதமேந்திய வீரர்களின் தலைவிதியையிட்டு அவர், ஒருபோதும் வாளாவிருக்கவில்லை. அவர்களின் கூறப்பட்ட அபிலாசைகளுக்குப் பெரிதும் அனுதபமாயிருந்ததுடன், அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத போதும், அவர்களுடன் கலந்துரையாட முயன்றார். பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவியாக இருந்த நாள்முதல், ராஜினி தீவிர விருப்புடன் சமூக நீதிக்கும், சமத்துவத்துக்குமாக, அவை மாணவர் பிரச்சினையாகவோ, தமிழருக்கெதிரான பாகுபாடாகவோ, தேசியப் பிரச்சினையாகவோ, பொதுவேலை நிறுத்தமாகவோ இருப்பினும் அவற்றுக்காகப் போராடினார். அவர் எப்பொழுதும் அடக்கப்பட்ட பகுதியினரோடு தன்னை அணி சேர்த்துக் கொண்டார். மிக இடர்பாடான நிலைமைகளில் மக்களின் உரிமைகளுக்காக துணிந்து நின்றார், வாதாடினார், பிரச்சினைகளை எதிர் கொண்டார். இணக்கப் பேச்சுகளில் ஈடுபட்டார். பிரித்தானியாவிலே 1983 முதல் 1986 வரை தங்கியிருந்தபோது தமது பட்ட மேற்படிப்புகளுடன், கறுப்பின மக்களின் பல்வேறு அரசியல் சமூக-பண்பாட்டுப் போராட்டங்களிற் பங்கு கொண்டார். இனப்பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும், தம்மை ஒரு சக்தியாக அங்கீகரிப்பதற்காகவும் கறுப்பின மக்கள் நடத்திய போராட்டங்களில் ப்ங்குபற்றினார். அவர் இதைத் தனக்கேயுரிய உற்சாகத்துடன் செய்தார். குறிப்பாகக் கறுப்பினப் பெண்களும்

## அவர் கேட்ட கேள்விகள் அழிவின் காரணங்களுக்குள் ஆழமாகச் சென்றன.

**அநாமதேய தந்திரத்தைத் தேர்ந்தெடுத்த கொலையாளி களால் இக்கேள்விக்குப் பதில் அளிக்கப்படவில்லை.**

பெண்நிலைவாதமும் என்ற துறையில் வர்க்கம், கறுப்பினப் போராட்டங்கள், ஏனைய மூன்றாம் உலகத் தோற்றப்பாடுகள் ஆகியவற்றின் பந்த எல்லைக் கோட்டுக்குள்ளே பெண்கள் சார்ந்த குறிப்பான விடயங்கள், எண்ணக்கருக்கள் பற்றி ஆய்வுகள் நடத்தினார்.

பெண் குழுக்களுடனும் அவர்களது அலுவல்களிலும் ராஜினியின் ஈடுபாடு, மக்கள் பற்றிய, குறிப்பாக அடக்கப்பட்ட மக்கள் பற்றிய, அவரது பரந்த அக்கறையின் ஒருபகுதியாகும். கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கான பெண்களின் போராட்டத்திலே, போராடுகின்ற மக்களுக்கான ஒரு செய்தியைக் கண்டார். யாழ்ப்பாணத்திலே பெண்கள் குழுவொன்று, 'பூரணி பெண்கள் நிலையம்' என்ற பெயரில், பல்வேறு உதவிகள் அவசியமான பெண்களுக்கான இல்லமொன்றை நிறுவ முன்வந்தபோது அவர் தாராள மனத்துடன் தானாக முன்வந்து அதை நிறுவும் பணியிலும், அது எதிர்நோக்கிய கடுமையான பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் ஈடுபட்டார். பெண்நிலைவாதத்தில் அவர் பொறுப்பேற்றுக் கொண்ட தத்துவப் பணிகளும், பல்கலைக்கழகத்துக்கு உள்ளும் புறமும் பெண்களுடன் அவரது தனியான உறவுகளும் அவர் எவ்வாறு தத்துவத்தையும் நடைமுறையையும் ஒன்றிணைத்தார் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இளைஞர்களை இராணுவமயப்படுத்துவது பற்றிய மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு சமாதான யாத்திரை ராஜினியின் இறுதி ஆசைகளில் ஒன்றாகவிருந்தது. "எமக்கு வேண்டும் உணவு, தோட்டாக்கள் அன்று" என்பது அவர் முன்வைத்த சுலோகமாகும். இது அவரால் உள்ளுணர்வு பெற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தச் சமாதான ஊர்வலம் எந்தவொரு அரசியற் குழுவையும் சாராது சுயாதீனமாக நடாத்தப்பட்ட யாத்திரையாகும். அது, 1989 நவம்பர் 21 இல் நடைபெற்றது. அந்த ஊர்வலத்திலே தெற்கிலுள்ள சிங்களவர், பிரித்தானியா, இந்தியா, பாகிஸ்தான், நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, தன்சானியா ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதைப் போற்றி உலக நாடுகளிலிருந்து பிரபலமானவர்களும் சாதாரணமானவர்களும் வாழ்த்துக்களை அனுப்பியிருந்தனர்.

சமாதான ஊர்வலத்திற்குப் பின்னர் ராஜினியை நினைவுகூர நடைபெற்ற கூட்டத்திற் பேசிய ஒரு மருத்துவ மாணவர் இராணுவமயப்படுத்தல் தொடர்பாக ராஜினியை ஞாபகப்படுத்தினார். அவரது மரணத்துக்குச் சிறிது காலத்துக்கு முன்னர், அவர் இங்கிலாந்திலிருந்து வந்ததன் பின்னர் அம் மாணவரை அழைத்து ஒரு மாணவ இயக்கம் என்ற முறையில் இதுபற்றி என்ன செய்கிறீர்கள் என விசனத்துடன் வினவினார். இந்திய சமாதானப்படையின் பொறுப்பிற்கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பு உச்ச நிலையிலிருந்தபோது இது நடந்தது.

அந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் அம்மாணவன் மேலும் கூறியதாவது:

"இந்தக் கூட்டத்துக்கு முன்னர் நடைபெற்ற சமாதான ஊர்வலத்தின் போது, தமிழ்த்தேசிய இராணுவத்தில் (T.N.A) கட்டாயமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட இருவரை நாம் கடக்கையில் அவர்கள் கூறியவை என்னைப் பாதித்தன. "சில மாதங்களுக்கு முன்னர் இந்த ஊர்வலத்தை நடத்தியிருந்தால்



நாம் இந்த இராணுவ உடையில் துப்பாக்கி ஏந்திக் கொண்டு இங்கு நின்றிருக்க மாட்டோம்" என அவர்கள் கூறினார்கள். மறுபுறத்தில், நான் பிறந்த வடமராட்சியில், ஏறக்குறைய 13 அல்லது 14 வயதுப் பையன்கள் எதுவித அரசியற் புரிந்துணர்வும் இன்றி ஆயுதங்களை ஏந்தத் தூண்டப்பட்டிருக்கிறார்கள். மாயை விரைவாகத் தெரிகிறது. எஞ்சியுள்ளவையெல்லாம் பழிக்குப் பழி வாங்குவதற்கான தாகமேயாகும்."

இந்த மாணவர் தலைவர்கள் தமக்குள்ள இடர் அபாயங்களை அறிந்திருந்தனர். துப்பாக்கி மனிதர் வந்து அவர்களுடன் பேசும்போது அதன் நோக்கத்தைப் புரிந்து கொண்டனர். அந்த நடவடிக்கையின் கருத்தென்னவென்று அவர்களுக்கு தெரியும். அவர்கள் இருட்டிய பின்னர், வீதிகளில் நடக்கும் போதும், இரவிலே தமது அறைகளுக்குச் செல்லும்போதும், பாதுகாப்பின்றியும், அனாதரவாயும் இருந்தனர். அவர்களைப் பயமுறுத்தும் சாவு, போராட்ட நெருக்கடியில் விளையும் திடீர்ச்சாவு அன்று. ஆனால் அவர்களுக்கு அது எந்நேரத்திலும் நிகழலாம். தமது ஆலோசகரும் நண்பியுமான ராஜனி ஏன் கொல்லப்பட்டார் என அவர்கள் அறிவார்கள். முன்னாள் மாணவ தலைவரான விமலேஸ்வரனின் கதி பற்றி அவர்கள் அக்கறையோடு அறிந்து வைத்துள்ளார்கள்.

ராஜினி இந்த மாணவருள் துணிவையும், பகுப்பாய்வு அணுகுமுறையையும், விழிப்புணர்வையும் பாய்ச்சினார். இதே வகையான செல்வாக்கையே தன்னைச் சுற்றியிருந்த பலரிடமும்

அவர் ஏற்படுத்தினார். அவரது செயல்கள், எழுத்துக்கள், உள்ளார்ந்த அக்கறை, மனோதிடம் ஆகியவை இந்தச் சமூகத்தில் பொறுப்பான பதவிகள் வகித்துக் கொண்டு தமது பொறுப்புக்களை அசட்டை செய்பவர்களது மனப்பாங்கிற்கு முரணானவை. இதனாற் தான் பலர் அவரின் நினைவின் பலத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். அதன் காரணமாக அதனை மழுங்கடிக்கவோ அடக்கி ஒடுக்கவோ முயல்கின்றனர். பலர் அவரோடு இருப்பதில் அசௌகரியப்பட்டனர். சிலர் அவரைக் கொல்லவும் விரும்பினர், என்பதையும் இது விளக்குகின்றது.

உடலை இம்சிக்கும் வன்முறை பற்றிய பீதி தமிழரின் வாழ்வில் ஒரு நிரந்தர அம்சமாகிப் போயிற்று. 1983 ஆம் ஆண்டு யூலையில் தமிழருக்கு எதிராக நடந்த வன்முறையைத் தொடர்ந்து அநேக தமிழர் நாட்டை விட்டு ஓடினார்கள். இப்பொழுது அவர்கள் லண்டன், நியூயோர்க், டொறன்ரோ, ஒஸ்லோ, அம்ஸ்ரடாம் முதலிய நகரங்களில் வாழ்கின்றார்கள். அதன் பின்னரும் பீதி தொடர்கிறது. அப்பீதி மேலும் நுண்ணியதாயினும், தொடர்ந்தும் யதார்த்தமானதாகவேயுள்ளது. இம்முறை, பயமுறுத்தல் உள்ளேயிருந்து வருகிறது. கூட்டத்தில் உரையாற்றுவார் எனத் துண்டுப்பிரசுரங்களில் அறிவிக்கப்பட்ட பேச்சாளர்கள் திடீரென வரவியலாமைக்கு ஏதாவது சாட்டுக் கூறுகிறார்கள். கலாச்சார நிகழ்ச்சி ஒன்றிலே பங்குபற்றுபவருக்கு தொலைபேசி மூலம் பயமுறுத்தல் கொடுக்கப்படுகின்றது. ஏனெனிற் பலம் மிக்க ஒரு போராட்டக்குழுவைச் சாராத நபர்களால் அது ஒழுங்கு செய்யப்பட்டமையாகும். பிரதான பிரச்சாரப்போக்குடன் மனமொப்பாதவர்கள் பகிரங்கக் கூட்டங்களிலே தொனியை அடக்கிப் பேசுகின்றனர். தாம் விரும்பாத கருத்துக்களைக் கொண்டவர் கடத்தப்படுவார் என்ற செய்திகள் அவருக்கு விளையாட்டாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இயக்கத்தைவிட்டு வெளிநாடு சென்ற போராளிகளுக்கு உதவுமுகமாக ஏதாவது திட்டத்தை ஒழுங்கு செய்யும் ஆட்களுக்கு இங்கே வாழும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் கொல்லப்படுவார்கள் என கொழும்பிலிருந்தோ, சென்னையிலிருந்தோ தொலைபேசி மூலம் பயமுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. இந்த அச்சச் சூழல் சகித்துக் கொள்ளப்படுகின்றமையினாலே நிலைமை மானக்கேடாக மாறிவருகின்றது.

சமுதாய உணர்வில்லாமையாற் தமிழர்கள் தனித்துப்போன தனிநபர்களாககியுள்ளனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சக்திகளிடமிருந்து உதவி கோரக்கூடியதும், பிரச்சார சாதனங்கள் அனுதாபமாயிருக்கக் கூடியதுமான நிலைமைகளினாலும், அவர்களது சுயமரியாதை, மகத்துவம் ஆகியவற்றின் நலன்களைப் பேணுமுகமாக ஐக்கியப்பட்டுத் தாபனமுற முடியாதவர்களாகிறார்கள். சில விதிவிலக்குகள் போக, உலகில் ஆங்காங்கே இயங்கும் தமிழ்ச் சங்கங்கள், தாம் வசதியாக ஒன்று திரளக்கூடிய இடங்களிலே கூடித், தாயகத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை விமர்சனமற்ற முறையிலே, பிழையாகத் தமது மனவிருப்பத்திற்கு ஏற்றவகையில் விளங்கிக் கொள்கின்றன. அவர்கள் விடுபடமுடியாதவாறு இந்த நோயுடன் பிணைக்கப் பட்டுள்ளார்கள். அதற்குரிய பரிகாரம் தாயகத்திலேதான் உண்டு.

இந்தப் போக்கு எமக்கு நூற்றுக்கணக்கான இளைஞர்களை உருவாக்கித் தந்துள்ளது. இந்த இளைஞர்கள் முன்னொருகால் தாம் சேர்ந்த போராளி இயக்கங்களை நல்லதெனக் கருதிப் பின்னர் அவற்றை விட்டு விலகி, அடிக்கடி மனம் முறிந்து மாயை தெளிந்து தாம் பிழைப்பதற்காக இந்தியாவிலும் மேற்கு ஐரோப்பிய நகரங்களிலும் "மதுபோதையின் பின்விளைவால்" பாதிக்கப்பட்ட மனிதர்களைப்போல் வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர்களுள் அநேகர் தமது இயக்கத்திற்கு அதிக எண்ணிக்கையான உறுப்பினரைத் திரட்ட உதவி புரிந்தவர்கள். ஏனையோர் நன்கறிந்த கொலையாளிகளா யிருந்துமுள்ளனர். சிலர் கொலை செய்த எண்ணிக்கை பத்துக் கணக்கானவை. இவர்களிடம் யாதாயினும் பொறுப்புணர்ச்சியிருந்தால், அல்லது ஏதேனும் தைரியம் மிஞ்சியிருந்தால், அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கும் மௌனம் அவர்களுக்குள்ள கௌரவமான தெரிவு அல்ல. தமது சமுதாயத்திலுள்ளவர்களின் நன்மை கருதி அவர்களுக்காகத் தொடர்ந்து சேவை செய்ய முடியுமானால், இடர் இன்னல் கருதாது பகிரங்கமாக வெளிவந்து தாம் செய்தவை பிழை என்றும், தாம் ஆதரித்து நின்றவை பிழை என்றும் ஒத்துக்கொள்ளலாம். ஒருமுறை ராஜினி ஒரு போராளிக்குழுவுக்கு உதவினார். அவரது பொறுப்புணர்ச்சியின் காரணமாக அவர் துணிந்து அக்குழுவின் கொள்கையைப் பகிரங்கமாக மறுதலித்தார். இந்த விடயத்தில் அவர் பெரும்பாலும் தனித்துவமானவர். அதனாலேயே, அவர் சமுதாயப் பொறுப்பை நமது இளைஞர்கள் ஏற்குமாறு அவர்களை இந்த வழியில் கொண்டுவரும் பொறுப்பைத் தானே தனது தோள்களிற் கண்ணீருடன் சுமக்க வேண்டுமென உணர்ந்தார்.

காலவோட்டத்தில் ராஜினிக்கு நடந்ததையடுத்து, அதாவது சகிப்பின்மையின் அதியுச்சச் செயலைத் தொடர்ந்து, கூட்டு ஆக்கமாக இந்நூலை வெளியிடுவது ஒரு மாபெருந் தேவையென எமக்கு மேலும் உணர்த்திற்று. எந்தவொரு வாசகனும் இந்நூலின் பக்கங்களில் வேறுபாடான கருத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இவற்றுள் அநேகமானவை ஒன்றையொன்று பூர்த்தி செய்வதாயிருக்கும். எமது வேறுபாடுகள் ஒருபுறமிருக்க, நாம் ஒன்றிணைந்து செயற்பட விரும்புகிறோம். நியாயமான விவாதங்களைச் செவி மடுக்க விரும்புகின்றோம். ஒருவர் மற்றவரால் மாற்றப்படுவதற்குத் நாம் தயாராக உள்ளோம். இது விஞ்ஞானத்தின் இலட்சியம் மட்டுமன்று, உண்மையைத் தேடுவதற்கான வழிமுறையுமாகும். ஒவ்வொருவரதும் வேறுபட்ட அபிப்பிராயங்களைப் பேணும் உரிமையையும் நாம் பாதுகாப்போம்.

இந்நூலை வெளியிட அனுசரணையாயிருந்தும், இந்நூலின் நேர்மையை கருதி அநேக ஆலோசனைகள் கூறித்துணைபுரிந்தும், விடயங்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, முழு உள்ளடக்கத்தையும் படித்துப் பார்த்து விவரங்களிற் கவனஞ் செலுத்தி பெறுமதிமிக்க தம் நேரத்தைச் செலவிட்ட பல நண்பர்களுக்கும், அறிமுகமானவர்களுக்கும் நாம் நன்றி கூற விரும்புகிறோம். இறுதியாக வெளியிடுவதிலும் விநியோகத்திலும் பல வழிகளில் உதவிய எல்லோருக்கும் நன்றி கூறுகிறோம்.

(தொடரும்— )

(லேக்ஹவுஸும்... 19ம் பக்க தொடர்ச்சி)

9. வன்னிநாட்டை அரசு புரிந்த வனிதையர்.
–பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
(இக்கட்டுரைகள் 1950ம் ஆண்டு வெளியானவை)

பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சோ. இளமுருகன், எப். எக்ஸ். ஸீ. நடராசா போன்றோர் இக்கால கட்டத்திலே எழுதிய கட்டுரைகள் விஷயச் செறிவு கொண்டனவாக மட்டும் அமையாது உரைநடை இலக்கியத்துறையிலேயும் புதிய பரிமாணமொன்றினையும் தோற்றுவித்தன. எளிமை, ஆழம், தெளிந்த சிந்தனை, புதியன புகுத்துதல் என்பன இக்கட்டுரைகளின் பண்புகளாகவமைந்தன."

1950ல் தினகரன் பிறபத்திரிகைகளை விட எவ்வளவு தூரம் பிரக்ஞை பூர்வமாக ஈழத்து ஆக்கங்களுக்கு இடம் தந்திருக்கிறது என்பதனையும் இ. சிவகுருநாதன் நன்கு ஒப்பிட்டு நோக்குகிறார். தனது நூலில் அவர் காட்டும் உதாரணத்தினையும் வாசகர்களுக்குத் தருகிறேன்.

"1940ம் ஆண்டுகளிலே தமிழ்ப் பத்திரிகைத் துறையிலே முன்னேற்றமான கொள்கைகளையும், தேசியத் தன்மைகளையும் முன்னெடுத்துச் செல்வதிலே 'தினகரன்' எத்தகைய பாத்திரம் வகித்தது என்பதனை அறிய வேண்டுமானால் அக்காலத்து வெளியான ஏனைய தேசியத் தினசரி ஒன்றோடு ஒப்பு நோக்கி ஆராய்வதே பொருத்தமானதாகும். இவ்விதத்திலே அக்காலத்து வெளிவந்த 'வீரகேசரி' வார இதழோடு 'தினகரனை' ஒப்பிட்டு ஆய்வு செய்வது பொருத்தமுடையதாகும்.

'வீரகேசரி' 5–11–50 இதழ் :

விஷய உள்ளடக்கம் :

1. முதற்பக்கம்,
செய்திகள்.
2. இரண்டு, மூன்றாம் பக்கங்கள்,
விளம்பரங்கள்,
"ஜம்புலிங்கம்" தொடர்கதை கே. வி. எஸ். வாஸ் எழுதியது.
3. நான்காம் பக்கம்,
திபெத் விவகாரம்,
அரைப் பக்க விளம்பரம், "கிங்ஸ்லியில், ரத்னகுமார்".
4. ஐந்தாம் பக்கம்,
தலையங்கம் – 1கலம்,
பெர்னாட்ஷோ தத்துவ சிந்தனைக் கட்டுரை.
5. ஆறாம் பக்கம்,
சோதிடம் – அரைப் பக்க பல விளம்பரங்கள்.
6. ஏழாம் பக்கம்,
புத்தக அரங்கம் – அரைப்பக்க சினிமா விளம்பரம்.
7. எட்டாம் பக்கம்,
முழுப்பக்க சினிமா விளம்பரம்.
8. ஒன்பதாம் பக்கம்,
'அந்தக்கடிதம்' – சிறுகதை.
அரைப் பக்க சினிமா விளம்பரம்.
9. பத்தாம் பக்கம்,
டார்ஜான் தொடர்கதை. (மொழிபெயர்ப்பு)
10. பதினோராம் பக்கம்,
'அந்தக்கடிதம்' (சிறுகதை தொடர்ச்சி)
அரைப்பக்க விளம்பரம்.
11. பன்னிரண்டாம் பக்கம்,
–வைத்தியப் பகுதி அரைப்பக்கம்.
–கவிமணி கட்டுரை அரைப்பக்கம்.

பன்னிரெண்டு பக்கங்களைக் கொண்ட 'வீரகேசரி' யின் உள்ளடக்கத்தோடு இனி 'தினகரனை' வைத்து ஆராய்வோம்.

'தினகரன்' 5–11–50 வார இதழ்

விஷய உள்ளடக்கம்:

1. முதற் பக்கம்.
செய்திகள்.
2. இரண்டாம் பக்கம்
'அந்தத் தீபாவளி' (சிறுகதை)
ஜோதிடம், அரைப்பக்கம் விளம்பரம்.
3. மூன்றாம் பக்கம்.
பேராசிரியர் சு. வித்தியானந்தன் கட்டுரை.
தீபாவளி கவிதை.
4. நான்காம் பக்கம்.
மட்டக்களப்புத் தமிழ் வளம்.
5. ஐந்தாம் பக்கம்.
செய்திகள்,
6. ஆறாம் பக்கம்.
பாவலர் பகுதி – சிறுகதை.
7. ஏழாம் பக்கம்.
கபடநாடகம், வே. க. ப. நாதன் எழுதிய தொடர் கதை–விக்கிரமராசசிங்கனின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டது.
'எல்லோராலும் எழுத முடியுமா?' – நடைச்சித்திரம்.
சிறுகதை – பெரிய கோபுரம்.
8. எட்டாம் பக்கம்.
அந்தத் தீபாவளி (சிறுகதைத் தொடர்ச்சி)
–சிறு விளம்பரம்.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட 'தினகரன்' இதழிலே தேசியத் தன்மையையும் தேசிய இலக்கியப் பற்றையும், விஷயச் செழுமையையும் இதன் மூலம் நாங்கள் தெளிவாகவே கண்டறிய முடியும். இத்தகையதொரு புதிய கண்ணோட்டமும், அரசியல் போக்குகளும் சேர்ந்தே 1956 காலப் பகுதியிற் புதியதொரு இலக்கியக் கண்ணோட்ட சிந்தனையினைத் தமிழ் அறிவாளிகள், இலக்கிய ஆர்வலர்கள் மத்தியிலே தோற்றங் கொள்ள வைத்தன என்பதனை நாங்கள் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இத்தோற்றுவாய்க்கு 'தினகர'னின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென்பதை எவரும் மறக்க மாட்டார்கள்."

**கதாநாயக வழிபாடு என்பது சினிமாவில் அல்ல அரசியலிலும் கலை இலக்கியத் துறையிலும் புகுந்து விவஸ்தை கெட்டுப் பிரதி பலிக்கும் போது அருவருப்பான சித்திரமே நமக்குக் கிடைக்கிறது.**

லேக்ஹவுஸ் வெளியிட்ட ஆங்கில, சிங்கள, தமிழ்த் தினசரிகள் அனைத்தினதும் போக்கினை லேக்ஹவுஸ் நிர்வாகமே தீர்மானிப்பதாகும். நிர்வாகத்தின் பணிப்புரைகளின் பிரகாரம் பத்திரிகையைக் கொண்டு நடத்துவதே பத்திரிகை ஆசிரியர்களின் பொறுப்பாகும். அன்றும் சரி இன்றும் சரி தினகரனுக்கு இது மிக மிக பொருந்தும்.

1959ஐ அடுத்து இலங்கையின் அரசியல் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து லேக்ஹவுஸ் ஸ்தாபனத்தின் நோக்கிலும் மாற்றம் ஏற்பட்டது.

இ. சிவகுருநாதன் எழுதுகிறார்:

"தினகரன் வரலாற்றிலும் புதிய இயல்பைக் காணக் கூடியதாக விருந்தது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் மட்டுமே முதற் கவனம் செலுத்திய 'லேக்ஹவுஸ்' நிர்வாகம் சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளில் சிரத்தை காட்டத் தொடங்கிற்று. 'டெயிலி நியூஸ்' பத்திரிகை போல இவை வளர்ச்சி காண வேண்டும் என்று விரும்பிற்று. அரசாங்கம் நிர்வாக மொழியை மாற்றியதால் விரைவில் ஆங்கிலப்பத்திரிகைகள் செல்வாக்கை இழந்து தேசியமொழிப் பத்திரிகைகள் இவ்விடத்தைப் பெறும் என நம்பினர்.

எனவே 'தினகரனை' நன்முறையில் பிரசுரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உருவத்திலும், உள்ளடக்கத்திலும் மாற்றம் ஏற்படுத்த விரும்பினர். இதே வேளையில் வெளிநாட்டுச் செலாவணிச்சட்டங்கள் தீவிரமாக அமுல் செய்யப்பட்டன. குடியகல்வு, குடிவரவுச் சட்டமும் இறுக்கமாக இருந்தது. இந்தியாவுக்குப் பணம் அனுப்பும் கஷ்டம் உருவாயிற்று. தினகரனில் இருந்த பல இந்தியர்கள் தாய்நாடு திரும்பினர். புதியவர்களைக் கொண்டு வரவும் முடியாதிருந்தது. எத் துறையாயினும் வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை மட்டுமே கொண்டு வரக்கூடியதாகவிருந்தது. 'லேக்ஹவுஸ்' க்கு ஒதுக்கிய வெளிநாட்டுச் செலாவணியில் தினகரனுக்கு மிகக் குறைந்த அளவே கொடுக்கக் கூடியதாக இருந்தது. இலங்கையில் தமிழ் சினிமாப்படத் தயாரிப்பு இல்லாததால் சென்னைத் திரை உலகச் செய்திகளை அனுப்பவும், இடையிடையே தொடர் நவீனம் போன்றவற்றைப் பெறவும் நிதி வசதி இருந்தது.

ஆதலின் உள்நாட்டுக் கலை வளத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தினகரனுக்கு இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் எடுக்கப்பட்டனர். ஆய்வாளர், மாவிட்டபுரம் த. சண்முகசுந்தரம் இவர்களுள் ஒருவர். இவர்களுக்கு பயிற்சி அளித்து முக்கிய பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டன.

**தேசிய இலக்கியத்தை வலியுறுத்தியதில் கைலாசபதிக்குரிய பங்கினை வலியுறுத்தும் அதேவேளையில் அக்காலகட்டச் சூழல் இதற்கு எவ்வளவு தூண்டுகோலாக இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ளும் போது தான் உண்மை தெளிவாகும்.**

இந்நிலையிலேயே க. கைலாசபதி, சி. தில்லைநாதன், ஆர். சிவகுருநாதன் போன்றவர்கள் 'தினகரனு'க்கு வந்தனர்."

இ. சிவகுருநாதன் தொடர்ந்தும் எழுதிச் செல்கையில் கைலாசபதி ஆசிரியராக இருந்த காலத்தில் நாட்டின் சூழலையும் லேக்ஹவுஸ் ஸ்தாபனத்தின் நிலைமையையும் விளக்கிக் கூறுவது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இ. சி. மேலும் கூறுகிறார்:

"எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் இறுதிக் காலம் அது. பொருளாதார நெருக்கடி மிக்க காலம். இவரது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையால் வெளிநாடுகள் உதவி அளிக்க முன்வரவில்லை. சர்வதேச நிறுவனங்கள் நிபந்தனையின்றி நிதி உதவி அளிக்கப் பின் வாங்கின. அணிசேராத நடுநிலை நாடாக, பாண்டுங் பிரகடனத்தை ஆதரித்த நாடாக இலங்கை இருந்தாலும், கிழக்கு ஜனநாயக நாடுகள் இவர் பக்கம் நின்றன. சோவியத்யூனியன், மக்கள் சீனா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளின் பேராதரவு இவருக்கு இருந்ததால் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இலங்கையைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கின.

இந்நிலை காரணமாக செலாவணி நெருக்கடி இருந்தது. வெளிநாட்டுக்கு உத்தியோக பூர்வமாகப் பணம் அனுப்ப முடியாத நிலை இருந்தது. ஆரம்பத்தில் ஓரளவு செலாவணி கிடைத்தது. 'தினகர'னுக்கும் ஓரளவு ஒதுக்கப்பட்டது சினிமாச் செய்திகளுக்கும், எல்லார்வி, கே.ஆர்பாலு போன்ற சிலரின் நெடுங்கதைகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டது. தேசிய இலக்கிய கோரிக்கை எழுந்தபோது செலாவணி முற்றாகக் கிடைக்கவில்லை. இலங்கை எழுத்தாளர்களையே 'தினகரன்' நம்பி நிற்க வேண்டிய நிலை இருந்தது. இலவசமாக இந்தியர்கள் யாராவது எழுதினாலொழிய இந்தியச் சிருஷ்டிகளை வெளியிட முடியாத நிலை உருவாகி விட்டது. இச்சந்தர்ப்பம் தேசிய இலக்கியம் பேசிய கைலாசபதிக்கு நன்கு உதவிற்று. மண்வாசனைச் செறிவுள்ள இலக்கியங்கள் 'தினகர'னில் இடம் பெற்றன. தேசிய ஒருமைப்பாட்டையும் தனித்துவத்தையும் எடுத்துக்கூறும் சிருஷ்டிகள் இடம் பெறலாயின. கதைகளை செ. கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, காவலூர் ராசதுரை, அ. முத்துலிங்கம், எஸ். பொன்னுத்துரை போன்றவர்கள் எழுதினார்கள். கா. சிவத்தம்பி, ஏ. ஜெ. கனகரட்னா, சொக்கன் போன்றவர்கள் விமர்சனக் கட்டுரைகளை எழுதினார்கள். சில்லையூர் செல்வராசன், நீலாவணன், மஹாகவி, இ. நாகராஜன் போன்றவர்கள் கவிதை எழுதினார்கள்."

அந்நியச் செலாவணி நெருக்கடி எவ்வாறு ஈழத்துத் தேசிய இலக்கியத்திற்குப் புத்துயிரூட்டியது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சிறீமாவோ பண்டாரநாயக்காவின் காலத்திலும் தென்னிந்திய வர்த்தக சஞ்சிகைகள் அந்நியச் செலாவணி காரணமாகத் தடை செய்யப்பட்ட போது அஞ்சலி போன்ற பத்திரிகைகள் தோன்றி அவ்விடத்தை இட்டு நிரப்ப முயன்றன.

கதாநாயக வழிபாடு என்பது சினிமாவில் அல்ல அரசியலிலும் கலை இலக்கியத் துறையிலும் புகுந்து விவஸ்தை கெட்டுப் பிரதி பலிக்கும் போது அருவருப்பான சித்திரமே நமக்குக் கிடைக்கிறது. தேசிய இலக்கியத்தை வலியுறுத்தியதில் கைலாசபதிக்குரிய பங்கினை வலியுறுத்தும் அதேவேளையில் அக்காலகட்டச் சூழல் இதற்கு எவ்வளவு தூண்டுகோலாக இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ளும்போது தான் உண்மை தெளிவாகும். □

551 HIGH ROAD
TOTTENHAM
LONDON N17 6SB

TEL: 081 808 2397
FAX: 081 801 8818

ANTON WARAN & CO.
Solicitors

With Compliments

TELEPASSPORT

ரெலிப்பாஸ்போட் மூலம்
குறைந்த செலவில்
வெளிநாடுகளுக்கு
கதைக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு
குமார்
081 - 521 9667

P. Paramalingam B.A., LL.,M.
Solicitor

PARAM & CO
Solicitors

Segaram House
221 Edgware Road
Colindale
London NW9 6LP

Telephone: 081 200 3500
Fax: 081 200 1360